சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 5 | இதழ்: 08 | ஜனவரி- 2024 | விலை - ரூ.15/-

VOL:5 | ISSUE: 08 | JANUARY - 2024 | Rs. 15/-





"ஸ்ரீ வித்யாதிராஜா" சட்டம்பி சுவாமிகள்

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-5 மலர்-08 ஜனவரி - 2024

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி



அன்பு குழந்தையே!

எல்லோரும் உன்னிடம், இப்போது என்ன ஆயிற்று உனக்கு? என்று கேட்கின்ற அளவிற்கு சிந்தனைகள், கவலைகள், கஷ்டங்கள் பற்றிய நினைவுகள் உன்னை ஆக்கிரமித்திருக்கிறது.

கஷ்டம் என்பது எல்லாருக்கும் வருவது. அதன் பிடியில் இருந்து யாரும் தப்புவதில்லை. இதைத் தெரிந்தும் உணராமல் இருக்கிறாய். மற்றவர்க ளுக்கு கஷ்டம் என்றால் ஓடிப்போய் ஆறுதல் சொல்வாய். இப்போது உனக்கு கஷ்டம் என்ற நிலை வந்ததும் ஆற்றாமல், என்னென்னவோ புலம்பிக் கொண்டு இருக்கிறாய்.

பிறந்தது முதல் இதுவரை எண்ணற்ற தொல்லைகளுடனும், கஷ்டங்களு டனும் வாழ்கிறேன், என்னை மீட்பார் யாருமில்லையே என புலம்புகிறாய்! எப்போது இந்த செய்தி என் காதுகளில் விழுந்ததோ, அப்போதே நீ விடுதலையின் படியில் காலை வைத்து விட்டாய் என்பதை உறுதியாக நம்பு.

அனைவர் மீதும் கருணைகொண்ட இந்த பக்கீர் உன்னையும் பாதுகாப்பான். இப்போது நீ பிரச்சனைகள், தடங்கல்கள் எனும் கடலில் கழுத்துவரை மூழ்கியிருக்கலாம். துக்கமும் வேதனையுமான படுகுழியில் ஆழமாக அமிழ்ந்து போயிருக்கலாம்.

அதை பற்றி நினைத்து வருத்தப்படா தே! அமைதியாயிரு, பொறுமையை கடைபிடி. கவலையை விட்டொழி. உனது துக்க நாட்கள் முடிந்து போயின. எனது இந்த வார்த்தையை நம்பு. உனக்காக நான் இருக்கிறேன்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் அறுபத்து ஆறாவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 3.12.23 ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு "சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தில்" (17/7A, பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை 23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் தொடங்கிய விழா தியானம், பஜனை எனத்தொடர்ந்தது. காலை பத்து மணிக்கு, இம்மாத இதழை பாராயணப்பகலவன் திரு. சுந்தர் சாய் அவர்கள் வெளியிட, சாயி பக்தர் திரு. குமார் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில் குருவருள் வேண்டி திரு. அசோக்குமார் சாய்ராம், சித்தர்தாசன் திரு. வெங்கடேசன், திரு. அகஸ்டின், திரு. அய்யாகண், திரு. ராஜசேகர் திரு.சுந்தரவடிவேலு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் "சாய் தியானாலயா" அன்னதானக்குழுவினர் அன்ன பிரசாதம் வழங்கினர். புத்தக வெளியீட்டை முன்னிட்டு இல்லாதவர்களுக்கும், இயலாதவர்களுக்கும் அவர்கள் இருக்கும் இடம்தேடிச் சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

உலக மக்களாகிய நாம் அனைவரும் இயற்கை அன்னையை தொடர்ந்து





துன்பப்படுத்தி வருவதன் பின் விளைவுகளை சமீபகாலமாக நாம் பார்த்தும், கேட்டும், அனுபவித்தும் வருகின்றோம். இனி அதிகளவில் அனுபவிக்கப்போகின்றோம் என்பதே உண்மை.

ஏனெனில், நாம் தற்போது இயற்கை அன்னைக்கு செய்த தீயவினைகளுக் குண்டான தண்டனையை அனுபவிக் கும் காலத்தில் இருக்கின் றோம். அனுபவித்தே தீரவேண்டிய கட்டா யத்தில் இருக்கிறோம். எனவே இனிவரும் காலத்தில் செய்த தவறுக் குண்டான தண்டனையை அனுபவிக்க





நாம் தயாராகிவிட்டால், தண்டனையால் கிடைக்கும் வலியைக் குறைக்க நம் பகவான் சாயிநாதர் அனுக்கிரகம் செய்வார் என்பது சத்தியமான உண்மை.

ஆனால் நாம் அதை விட்டுவிட்டு, மழை வெள்ளம், புயல் பூகம்பம் போன்ற நிகழ்வுகளுக்காக, குய்யோ முறையோ என்று ஒருவரை ஒருவர் குறைகூறி குற்றம்சாட்டுவதால் பயன் ஒன்றும் நேரப்போவதில்லை.

இனி இப்பூமிக்கு நேரப்போகும் இயற்கைப் பேரழிவுகளை நம்மால் தடுத்து நிறுத்தமுடியாது. ஆனால், அதற்கேற்றவாறு நம்மை தயார் படுத்திக்கொள்ள முடியும் அல்லவா?

எனவே அதற்கேற்றார்போல் நம்மை மாற்றிக்கொண்டு செய்த தவறுகளுக்குண்டான தண்டனையை ஏற்றுக்கொண்டு, இருக்கும் சொச்ச காலங்களிலாவது இயற்கைக்கு இடையூறு இல்லாத வகையில் வாழ்வேன் என்று உறுதி ஏற்றுக் கொண்டு வாழ்வதே நாம் மானுடப் பிறவி என்பதன் அர்த்தமாக இருக்கும்.

எனவே, பகவான் சாயிநாதரிடம், மழையை நிறுத்து, வெள்ளத்தை நிறுத்து என்று பிரார்த்திக்காமல், செய்த தவறுக்கு தண்டனை என்று ஏற்றுக்கொள்வோம். அப்போதே நாம் மழை வெள்ளத்தில் இருந்து காக்கப்படுவோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனை வரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத் துடனும், மனநிம்மதி யுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம்.

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

– அன்புடன் ஆசிரியர்

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜயம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

தொடர் –66

குருவைத் தேடி


பிம்பல்வாடி ரோட்டைக் கண்டுபிடித்து 18 ஆம் நம்பர் வீட்டை தேடினேன். சிறிது நேரத்தில் 18 ஆம் நம்பரை கண்டுபிடித்தேன். ஆனால் அது வீடு இல்லை. அது ஒரு காலி மனை?

மனதிற்குள் சாயிநாதா என்று கூறிக் கொண்டேன். சாயி தன் லீலையை என் வாழ்க்கையில் ஆரம்பித்துவிட்டார் என்பதை உணர்ந்து கொண்ட தருணம் அது. நான் அதற்குமேல் அங்கு தட்சிணாமூர்த்தியை தேட விரும்ப வில்லை. உடனடியாக சமாதி மந்திர்க்கு திரும்பிவிட்டேன்.

சமாதி மந்திரில் நான் எப்பொழும் அமரும் இடத்தில் ஐந்தாறு நபர்கள் அமர்ந்திருந்தார்கள். அருகில் வந்து பார்த்தபோதுதான் அது தமிழ் குடும்பம் என்பது புரிந்தது. நான் அமைதியாக அவர்களுக்கு அருகில் சென்று அமர்ந்து கொண்டேன்.

அவர்களில் பெரியவர் ஒருவர், மற்றவர்களிடம், தமிழ் சாய் சத்சரிதம் வாங்க மறந்துவிட்டேன். இங்கேயே இருங்கள். நான் சென்று வாங்கி வருகின்றேன் என்று எழுந்து சென்றார்.

எனக்கு அப்போதுதான் தமிழ் மொழியில் சாய் சத்சரிதம் புத்தகம் இருக்கின்றது என்பதே தெரியும். எனவே நானும் சட்டென்று எழுந்து



கொண்டு பெரியவரின் பின்னாலேயே சென்றேன். பெரியவர் சமாதி மந்திருக்குள் இருக்கும் புத்தக ஸ்டாலுக்குச் சென்று தமிழ் சத்சரிதம் இருக்கின்றதா என்று கேட்டு பத்து புத்தகம் வாங்கினார்.

பின்னாலேயே சென்ற நானும் ஒரு சத்சரிதம் வாங்கிக்கொண்டேன். பின்பு நான் அமரும் இடத்திற்கு வந்து அமர்ந்து கொண்டு சத்சரி தத்தை ஆர்வத்தோடு படிக்க முயன்றேன். ஆனால் அருகில்

இருந்த தமிழ் குடும்பத்தார் என்னை படிக்கவிடாமல் அவர்களின் குடும்பக்கதைகளை பேசிக்கொண்டே இருந்தனர்.

சரி கொஞ்ச நேரமானால் தூங்கி விடுவார்கள். அப்புறம் நாம் எழுந்து படிக்கலாம் என்று நானும் தூங்குவது போல் படுத்துக் கொண்டேன். ஆனால் இரவு முழுவதும் ஊரில் இருக்கும் குடும்பத்தினரைப் பற்றி பேசி, பேசி, எனக்கும் என் குடும்பத்தைப்பற்றி நினைவு படுத்திவிட்டார்கள்.

இறுதியாக பெரியவர், என் பேரனைப் பார்த்து ஒரு வாரமாகுது. நானில்லாம அவன் ஸ்கூலுக்கு கூட போக மாட்டான் சரியா சாப்பிடக்கூட மாட்டான். அவனைப் பார்க்க இன்னும் ரெண்டு நாளாகும். அதுவரைக்கும் என்ன செய்வானோ என்று அங்கலாய்த்தார்.

விடிய விடிய பேசிக்கொண்டே இருந்தவர்கள் அதிகாலை 4 மணிக் கெல்லாம் புறப்பட்டு, பேரூந்தில் புனே சென்று அங்கிருந்து புகை வண்டியில் சேலம் செல்வதாகப் பேசிக்கொண்டார்கள்.

அவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டே படுத்துக் கொண்டிருந்தவன் அதிகாலை வேலையில் சற்றே கண் அயர்ந்து விட்டேன். பக்தர்களின் சாய் கோஷத்தைக் கேட்டு கண் விழித்துப் பார்த்தேன். மணி காலை ஐந்தாகி விட்டது. எழுந்து பார்த்தால் அருகில் சேலம் குடும்பத்தைக் காணோம். ஊருக்கு போயிருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டேன்.

நடந்த நிகழ்வுகளை பிரித்துப்



பார்க்கும் பக்குவம் அப்போது எனக்கில்லாத காரணத்தினால், இரவெல்லாம் பாசத்தோடு பேசிக்கொண்டிருந்த குடும்பத்தினரின் பாசவலையில் நானும் விழுந்து விட்டேன் என்பது அப்போது எனக்கு விளங்கவில்லை.

பகவான் சாயிநாதரை நம்பி வந்து விட்டபிறகு, நம் குடும் பத்தினரின் சகலவிதமான தேவைகளையும் சாயிநாதரே கவனித்துக்கொள்கிறார் என்பதனையும் நான் உணரவில்லை. சாயிநாதர் விரும்பியதால்தான் நாம் அவரை தரிசிக்கும் பாக்கியம் பெறுகிறோம். அதுபோலவே அவரது அனுமதியில்லாமல் நாம் மீண்டும் வீட்டிற்கு திரும்பமுடியாது என்பதும் உண்மை.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி! என்று அவரை தேடி வந்த தென்னவோ உண்மைதான். ஆனால் அவரருளாலே சிறிது தெளிவு கிடைத்ததும் உடனே என் வீடு, என் வாழ்க்கை என்று லௌகீகமாக சிந்திப்பதில் என்ன நியாயம்! உன்னை பாதுகாத்த பாபா உன் குடும்பத்தை பாதுகாக் காமல் விட்டுவிடுவாரா என்ன?

ஆனால் இந்த தத்துவமெல்லாம் என் மண்டையில் ஏறவில்லை. லௌகீக மாயை என்னை மயக்கியது. என் மனமும் சாயி என்னை இல்லம் திரும்ப அனுமதிக்கின்றாரா என்பதைப்பற்றி யோசிக்க மறுத் தது. அதற்குப்பதில் என் மனம் மனைவி, குழந்தைகளை பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது. ஊரைவிட்டு புறப்பட்டு பத்து நாட்களு க்குமேல் ஆகிவிட்டது. ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெறவே, நானும் ஊருக்குச் செல்லலாம் என்று முடிவு செய்தேன்.

இரண்டு குழந்தைகளை வைத்துக்கொண்டு என் மனைவி என்ன செய்கின்றாரோ! நான் சீரடிக்கு வரும்போது கையினில் இருந்த ஆயிரம் ரூபாயை மட்டும் கொடுத்து விட்டு வந்தேன். அம்மா, அக்காவுடன் கூட்டுக்குடும்பமாக வசித்தாலும், குழந்தைகளின் தனிப்பட்ட தேவைகளுக்கு என்ன செய்கின்றாரோ என்ற கவலை என்னை குடைய ஆரம்பித்தது.

என் குடும்பத்திற்கு உப யோகப்படாத பணம் என்னிடம் சும்மா இருந்து என்ன பயன். அதை குடும்பத்திற்கு கொடுத்தாலாவது உபயோகமாய் இருக்கும் அல்லவா? எனவே நாம் ஊருக்கு செல்வதுதான் சரி என்று ஊருக்கு புறப்பட ஆயத்தமானேன்.

இருப்பினும் மனதிற்குள் என்னவோ சத்சரிதத்தை படித்து முடித்துவிட்டு போகலாம் என்ற எண்ணமும் வந்து போனது. ஆனால் இரயிலில் போகும்போதே படித்து முடித்துவிடலாம் என்று எனக்கு



நானே சமாதானம் கூறிக்கொண்டு சீரடி பேரூந்து நிலையத்தை அடைந்து புனேக்கு பேரூந்து பிடித்தேன்.

மதியம் 2 மணிக்கு புனே இரயில் நிலையம் வந்து சென்னைக்கு இரயில் விசாரித்தேன். மாலை 6 மணிக்கு இரயில் இருப்பதை அறிந்துகொண்டு முன்பதிவில்லாத பெட்டிக்கு டிக்கெட் எடுத்துக்கொண்டு காத்திருந்தேன். சும்மா உட்கார்ந்திருக்கும் நேரத்தில் சத்சரிதம் படிக்கலாம் என்று படிக்க ஆரம்பித்தேன். மாலை 6 மணி வரை இருபது அத்தியாயங்கள் படித்து முடித்திருந்தேன்.

6 மணிக்கு இரயில் வந்தது. ஆனால் ஏகப்பட்ட கூட்டம். கூட்டத்தோடு கூட்டமாய் எப்படியும் ஏறிவிடலாம் என்று கடுமையாக முயற்சித்தும் முடியவில்லை. இரயில் புறப்பட்டு விட்டது. பெங்களூர் இரயிலில் ஏறி குண்டக்கல்லில் இறங்கி மாறிக்கொள்ளலாம் என்றால், அடுத்தடுத்து தென் மாநிலங்களுக்குச்

செல்லும் இரண்டு இரயில்களும் கடுமையான நெருக்கடியில் சென்றன.

விசாரித்ததில் ஹோலிப்பண்டிகை காலமாதலால் தொடர் விடுமுறையை ஒட்டி தென் மாநில மக்கள் சொந்த ஊர் செலவதால் இந்த நெருக்கடி என்பதை தெரிந்து கொண்டேன். அடுத்து இரவு 12 மணி சென்னை விரைவு வண்டிக்காக காத்திருக்கலாம் என்றபடி மீண்டும் சத்சரிதம் படிக்க ஆரம்பித்தேன்.

12 மணி வரையில் 40 அத்தியாயம் படித்து முடித்திருந்தேன். இரவு 12 மணிக்கு இரயில் வந்தது. ஆனால் அதிலும் இதே கதைதான். என்னால் இரயிலின் கதவைக்கூட தொட முடியவில்லை. இரயில் சென்றதும் ஏறமுடியாத பயணிகள் அடுத்த இரயிலுக்காக காத்திருக்க ஆரம்பித்தனர்.

கூட்டத்தைப்பார்த்தால் அடுத்த இரயிலிலும் இடம் கிடைக்காது போலிருந்தது. இதற்கு நாம் சீரடியிலேயே இருந்திருக்கலாம். சாய்நாதர் நம்மை வீட்டிற்கு செல்ல அனுமதிக்கவில்லை போலும். நாம்தான் உணர்ச்சி வயப்பட்டு புறப்படுட்டு வந்து விட்டோமோ என்று என்னை நானே நொந்து கொண்டேன்.

இருப்பினும் சத்சரிதத்தை படிக்கும் ஆவலில்,முகத்தைக் கழுவிக்கொண்டு, ஒரு தேனீர் அருந்திவிட்டு திரும்ப படிக்க ஆரம்பித்தேன். அதிகாலை 5 மணிக்கு சத்சரிதத்தை முழுவதும் படித்து முடித்துவிட்டு புத்தகத்தை தொட்டு வணங்கிவிட்டு பைக்குள் வைத்துக் கொண்டேன்.

அதிகாலை 6 மணிக்கு பெங்களூர் செல்லும் இரயில் பயணிகள் இன்றி காலியாக வந்தது. என்ன அதிசயம் சத்சரிதம் படிக்காமல் என் எல்லையை விட்டுச் செல்லக்கூடாது என்று சாயியின் கட்டளை போலும். ஆம் சத்சரிதத்தை முடிக்கும் வரை எனக்கு எந்த இரயிலிலும் இடம் கிடைக்கவில்லை. சத்சரிதத்தை படித்து முடித்த உடன் இரயில் காலியாக வருகின்றதே என்று ஆச்சரியப்பட்டேன்.

ஓடிப்போய் அதில் ஏறிக்கொண்டேன். சன்னல் ஓர சீட்டில் வசதியாக அமர்ந்து கொண்டேன். இரயில் புறப்பட்டதும் ஏதோ இனம்புரியாத சோகம் வந்து என் மனதைக் கவ்வியது. எனக்குப் பிரியமானதை பிரிந்து வந்ததைப் போன்று ஒரு வலி. இனம் புரியாத ஏக்கம்.

இனி எப்போது சீரடி வரப் போகிறோம். எவ்வளவோ துன்பத் திற்குப் பிறகு என் குருவை தேடி அடைந்து விட்டதாக எண்ணுகிறேன். இனி என் குரு தான் என்னை வழி நடத்தவேண்டும். என் எதிர்கால வாழக்கை எதை நோக்கியதாக இருக்கப் போகிறது. என்று சற்றே குழம்பித்தவித்தேன். ஆனால் என் மனம் சட்டென்று பதில் கூறியது. அவ்வளவிற்கும் ஒரே பதில்தான். இனி எனக்கு எல்லாமே சாயிதான்!

மனம் முழுவதும் சாயி, சாயி என்றே உச்சரித்துக் கொண்டிருந்தது. அன்று மாலை இரயில் குண்டக்கல் இரயில் நிலையம் வந்தடைந்தது. அங்கிருந்து சென்னை விரைவு வண்டியில் பயணித்து மறுநாள் அதிகாலை 3 மணிக்கு சென்னை வந்து சேர்ந்தேன்.

அதிகாலையில் என்னைப்

பார்த்ததும் என் குடும்பத்தார் ஆச்சர்யப்பட்டனர். என் மனைவி என் முகத்தில் இருந்த சிறிது தெளிவைப் பார்த்து புரிந்து கொண்டு ஆனந்தப்பட்டாள். பாபாவைப் பாத்தீங்களா? பாபாவிடம் அமர்ந்து தியானம் செய்தீர்களா? பாபா என்ன சொன்னார் என்று ஆர்வமாக கேள்விகளை அடுக்கினார்.

மனிதர்கள், கடவுள் இப்படித்தான் வருவார் என்று எதிர்பார்பதைப் போன்று கடவுள் நம்மிடம் ஒருபோதும் வருவதில்லை என்பதை எப்படிச் சொல்வது. அவர்கள் வரும்விதமே அலாதியானது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் "அனுபவ வடிவாய்"

பிறகு பொறுமையாய் சொல்கிறேன். "அனுபவத்தின் வாயிலாக ஆயிரம் சாயி தரிசனம் பெற்றேன்". என்று அமைதிப் படுத்திவிட்டு பையினில் இருந்த பணத்தில் சில்லரை போக 4000 ரூபாயை என் மனைவியின் கையில் திணித்துவிட்டு என்னை நானே ஆசுவாசப்படுத்திக்கொண்டேன்.

காலை மணி ஆறு இருக்கும். எனக்குள் என்ன நடந்து என்றே புரியவில்லை. திடீரென்று என் உடல் நடுங்க ஆரம்பித்தது. உடல் வேர்த்து ஊற்றியது. தலை வலித்தது மனம் ஒரு நிலையில் இல்லை. உண்மையில் என் சொந்தமெல்லாம் இங்கிருக்க, உண்மையான சொந்தத்தை எங்கோ விட்டுவிட்டு வந்ததைப்போன்ற உணர்வு. சற்று நேரம், கண்களை மூடி தலையைப் பிடித்தபடி அமர்ந்திருந்தேன்.

மனதிற்குள்ளாக ஒரு குரல் சீரடிக்குச் செல், சீரடிக்குச் செல், தாமதிக்காதே! உடனே புறப்படு. " நிறைவாகும்வரை மறைவாய் இரு" என்று என்னை அவசரப்படுத்தியது. சட்டென்று கண்களைத்திறந்து என் மனைவியைப் பார்த்தேன். என் நிலையைப் பார்த்து அவர்களும் சற்றே அதிர்ச்சியானார்கள்.

நான் என் மனைவியைப்பார்த்து தீர்க்கமாகக் கூறினேன். பயப்படாதே! எனக்கு ஒன்றுமில்லை! இன் னும் ஒரு சில நாட்களுக்கு குழந்தைக ளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள். நான் சாயிநாதரிடம் சொல்லாமல் வந்துவிட்டேன். போய் சொல்லிவிட்டு வந்து விடுகின்றேன். என்றபடி மீண்டும் பையை தூக்கி தோளில் மாட்டிக்கொண்டேன்.

வேறு யாராக இருந்தாலும். இவன் ஒரு பைத்தியக்காரன் என்று தான் நினைத்திருப்பார்கள் ஆனால் என் மனைவி என்னை அன்புடன் பார்த்தார்கள். நீங்கள் பயப்படாதீர்கள் நான் பார்த்துக்கொள்கின்றேன். உங்கள் மனதிற்கு என்ன படுகிறதோ அதைச் செய்யுங்கள் என்றார்கள். சாயி தேவனின் மாபெரும் கருணையை என் மனைவியின் சொல்லில் கண்டேன்.

என் மனைவிக்கு மனதார நன்றி கூறிக்கொண்டு, உடனே ஆட்டோ பிடித்து இரயில் நிலையம் வந்தடைந்தேன். காலை 7 மணிக்கு மும்பை விரைவு வண்டி புறப்படத் தயாராக இருந்தது. ஓடிப்போய் அதில் ஏறிக்கொண்டேன்.

மீண்டும் "குருவை தேடி"

(அடுத்த இதழில் இந்த தொடர் நிறைவு பெறும்)

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"தீகம்பரா தீகம்பரா ஏநீ பாத ஏநீ வல்லப தீகம்பரா"

"தீகம்பரா தீகம்பரா ஏநீ சக்ரதத்தாத்ரேயா தீகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; சுந்தர்சாய், 9789404451

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"



– ஜெயந்தி ஸ்ரீராம்

நமது குருவின், மாற்றுமத நண்பருக்கு, அவரது நின்றுபோன கட்டிடத்தை பாபா எப்படி கட்டித் தந்தார் என்ற லீலையை இம்மாதம் பருகுவோம்.

நாங்கள் சென்னைக்கு வந்து வசிக்க ஆரம்பித்து, பின்னாளில் பாபாவின் சேவைக்கு என எங்களை அர்பணித்து கொண்ட பின் சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பின்பு எங்களது ஊரான குடந்தைக்குச் சென்றோம்.

அங்கு எதார்த்தமாக குருவின் பழைய நண்பர் ஒருவரை சந்திக்க நேர்ந்தது. அவர் மாற்றுமதத்தைச் சேர்ந்தவர். அவரின் தோற்றமே மிகவும் வறுமையில் இருப்பதையும், மனத் துன்பத்தில் இருப்பதையும் காட்டியது. அவர் குருவின் பால்யகால நண்பர் என்பதால், குரு அவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது. அவரது நிலையை குருவிடம் பகிர்ந்து கொண்டார்.

தான் வெகுகாலமாக ஆசைப் பட்டது போன்று பத்தாண்டுகளுக்கு முன்பாக வீடு கட்ட ஆரம்பித்தபோது. பல்வேறு சிக்கல்கள் எழுந்து வீட்டை முழுமையாக கட்டி முடிக்க முடியாமல் இருப்பதையும், கையில் இருந்த அனைத்து சேமிப்புகளையும் வீட்டில் போட்டுவிட்டதால் தற்போது குடும்பம் நடத்தவே மிகவும் சிரமப்படுவதாகவும், வீட்டையும் முழுமையாக கட்டி முடிக்க முடியாமல், தற்போது வாடகை வீட்டில் வசிப்பதையும் கூறி தனது வேதனையைப் பகிர்ந்து கொண்டார்.

குரு அவருக்கு ஆறுதல் கூறி தேற்றினார். எனக்கோ அவருக்கு ஒரு பாபா சிலையை கொடுக்க வேண்டும் என்று மன உந்துதல் ஏற்பட்டது. நான் குருவைப் பார்த்தேன். அவரோ எனது எண்ணத்தை புரிந்து கொண்டதைப் போன்று தலையை வேண்டாம் என்பது போன்று ஆட்டினார். நான் புரிந்து கொண்டு என்னை அமைதிப்படுத்திக் கொண்டேன்.

பிறகு நண்பரிடம், நாளை நாங்கள் உன் வீட்டிற்கு வருகின்றோம். நிச்சயம் உன் கவலைகள் மாறும். தைரியமாக இரு என்று கூறி விடைபெற்றுக் கொண்டார் குரு.

நாங்கள் எங்களது தங்குமிடம்

வந்ததும், குருவிடம், எனது எண்ணத் தைக்கூறி, அவருக்கு பாபா சிலை கொடுப்பதை ஏன் வேண்டாம் என்றீர்கள் என்று கேட்க, அதற்கு குரு அவர்கள், உனது எண்ணம் மிகவும் சரியானதுதான். ஆனால், அதை உடனே செயல்படுத்தி விடவேண்டும் என்ற உணர்வு தவறானது.

அது அடுத்தவர்களின் கஷ்டத்தை நாம் பயன்படுத்திக் கொள்வது போன்று ஆகிவிடும். அதைத்தவிர அந்த நண்பன் பாபாவை ஏற்றுக்கொண்டால் நல்லது. ஏற்க மறுத்துவிட்டால் என்ன செய்வது. நம் மனம் வேதனைப்படும் அல்லவா? எதுவானாலும் சற்று காலம் தாழ்த்தி செய்வது நல்லது என்று என் மனதிற்கு பட்டது.

மேலும் நாளை வீட்டிற்கு வருகிறேன் என்று கூறினேன் அல்லவா? நாளை பாபா சிலையை எடுத்துக்கொள். அவன் மனைவியிடம் கொடுக்கலாம் என்று கூறினார். எனக்கும் அது சரி எனப்பட்டது. அக்காலகட்டத்தில் நாங்கள் எங்கு சென்றாலும் எங்கள் கைபையினில் ஓரிரெண்டு பாபா சிலைகளை எடுத்துச்செல்வோம்.

மறுநாள் காலையில் பாபா சிலையுடன் சுவாமிமலைக்கு அருகில் இருக்கும் நண்பரது வீட்டிற்குச் சென்றோம். நண்பரும் அவரது மனைவியும் எங்களை வரவேற்றனர். பத்துக்கு பத்து உள்ள சிறிய வீட்டில், தம்பதியினர் இருவரும் மூன்று குழந்தைகளுடன் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வருவது தெரிந்தது.

நண்பர் எங்களை பாதியில் நின்றுபோன அவரின் கட்டிடத்திற்கு கூட்டிச்சென்றார். சுமார் 4000 சதுர அடி கொண்ட இடம். 1000 அடியில் வீடும், மீதி சுற்றிலும் தோட்டமுமாக திட்டமிட்டு கட்ட ஆரம்பித்தது



தெரிந்தது. நான்கு புறமும் சுவர்கள் மட்டும் எழுப்பப்பட்டு முதல் தளம் போடப்படாமல் நிறுத்தப்பட்டிருந்தது. கட்டப்பட்டு பத்தாண்டுகள் ஆனதால் மிகவும் பழுதான நிலையில் இருந்தது.

வீட்டை சுற்றிக்காட்டிவிட்டு நண்பர் கண்கலங்கி நின்றார். குரு அவரின் கைகளைப்பிடித்துக்கொண்டு, கண்டிப்பாக இறைவன் உனக்கு ஒரு நல்ல வழியைக்காட்டுவான். கவலைப்படாதே! நான் வணங்கும் சாயிபாபாவிடம் உனக்காக தொடர்ந்து பிரார்த்திக்கின்றேன். நிச்சயம் நன்மையே நடக்கும். என்றவர் என் மனைவி உங்களுக்காக ஒரு பரிசு தர விரும்புகிறாள். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டு என்னப் பாரத்தார்.

நான் உடனே என் பையினில் இருந்து பாபா சிலையை எடுத்து நண்பரின் மனைவியிடம் கொடுத்தேன். அதை அவர்கள் கைகளில் வாங்காமல் விநோதமாகப் பார்த்துவிட்டு இதை நாங்கள் என்ன செய்ய வேண்டும். இதற்கு நாங்கள் ஏதாவது வழிபாடு செய்ய வேண்டுமா? அப்படி வழிபாடு

செய்ய வேண்டும் என்றால் எங்கள் மதம் அதை ஏற்றுக் கொள்ளாதே? என்றெல்லாம் வரிசையாக கேள்வி எழுப்பினார்கள்.

உடனே குரு அவர்கள், உங்கள் குழந்தைகளுக்கு திடீரென்று உடல்நலமில்லை என்றால், என்ன செய்வீர்கள் என்று கேட்டார். அருகில் இருக்கும் மருத்துவரிடம் அழைத்துச் செல்வேன் என்றார் நண்பர். அங்கு சென்றபின்பு மருத்துவர் எந்த மதத்தை சேர்ந்தவர் என்று பார்ப்பீர்களா? அல்லது குழந்தைக்கு மருத்துவம் பார்பீர்களா? என்றார் குரு.

குழந்தைக்கு மருத்துவம் தான் பார்ப்பேன் என்றார் நண்பர். அதுபோலத்தான். இவர் மிகச்சிறந்த மருத்துவர். இவரை மருத்துவராக மட்டும் பாருங்கள். நீங்கள் செய்ய வேண்டியது மருத்துவரின் மீது நம்பிக்கை வைப்பது மட்டும்தான். பூஜையோ, புனஸ்காரமோ அல்ல.

ஒரு வேளை மருத்துவர் மாற்று மதத்தைச் சேர்ந்தவராக இருந்தால், அந்த மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக் கொள்வதற்கு நீங்கள் மதம் மாற வேண்டியதில்லை அல்லவா? அதுபோலத்தான் இவரை நம்புவதற்காக நீங்கள் மதம் மாற வேண்டிய அவசியமில்லை.

இந்த சிலையை உங்கள் வீட்டில் எங்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். அவர் செய்வார் என்ற நம்பிக்கையுடனும், அவர் செய்வது வரை பொறுமையாகவும் இருங்கள். பாபா மனது வைத்துவிட்டால் ஒரே விநாடியில் எல்லாமே மாறிப்போய் விடும். என்று குரு கூறியதும், நண்பரும், அவரது மனைவியும்,



என்னிடமிருந்து பாபாவின் சிலையைப் பெற்றுக்கொண்டனர்.

பிறகு நாங்களும் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு ஊருக்குத் திரும்பினோம். பத்து நாட்களுக்குப் பின்பு சனவரி மாத புனித யாத்திரைக்காக சீரடிக்குச் சென்று விட்டோம்.

நாங்கள் சீரடியில் இருந்தபோது குடந்தை நண்பர் குருவிற்கு போன் செய்து, உடனடியாக குடந்தைக்கு வரமுடியுமா என்று கேட்டிருக்கிறார், குருவோ தான் சீரடியில் இருப்பதாக கூறி தான் யாத்திரையை முடித்துவிட்டுவர பத்து நாள் ஆகிவிடும். அப்படி என்ன அவசரம் என்று கேட்டிருக்கின்றார்.

அதற்கு அந்த நண்பரோ, வீடுதான் கட்டமுடியவில்லை. இடத்தையாவது விற்றுவிலாம் என்று கடந்த ஐந்து வருடமாக முயற்சித்தும் எதுவும் நிகழவில்லை. நீங்கள் எங்கள் இல்லத்திற்கு வந்து பாபா சிலையை கொடுத்துவிட்டு நம்பிக்கையாகவும்,

பொறுமையாகவும் இருக்கச் சொல்லிவிட்டுச் சென்றதில் இருந்து நானும் ஒரு நாளைக்கு நான்கைந்து முறையாவது பாபா சிலையையே உற்றுநோக்கிக் கொண்டு மனதில் நம்பிக்கை, பொறுமை என்று எனக்கு நானே கூறிக்கொள்வேன்.

இப்போது நடந்ததை நினைத்தால் நடப்பது கனவா? நனவா? என்றே நம்ப முடியவில்லை. சென்ற வாரத்தில் ஒருநாள் சென்னையில் இருந்து ஒரு கட்டுமான நிறுவனம் என்னை தொடர்பு கொண்டார்கள். அவர்களின் கட்டிட கட்டுமான திட்டத்திற்கு 4000 சதுர அடி நிலம் தேவைப்படுவதாகவும் அதற்கு எனது நிலம் சரியாக இருக்கும் தர முடியுமா என்று கேட்டார்கள்.

நான் உங்களிடம் ஆலோசித்து விட்டு கூறுவதாக கூறியிருக்கின்றேன் என்று கூற, சந்தோசமான செய்தி தானே! உடனடியாக முடித்துக் கொண்டு பிரட்சனையில் இருந்து வெளிவர வேண்டியதுதானே! இதில் என்னிடம் ஆலோசிப்பதற்கு என்ன இருக்கின்றது என்றார் குரு.

அதற்கு அந்த நண்பர், இல்லை யில்லை. போனமாதம் நாம் சந்திக்கவில்லை என்றால் இதை நான் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டேன். நாம் சந்தித்ததும், நீங்கள் எனக்கு பாபா சிலையை கொடுத்ததும். நான் அவரின்மீது என்னையறியாமல் நம்பிக்கை வைத்ததும், பலநாட்கள் மாறாத எனது பிரட்சனை, இப்போது முடியும் தருவாய்க்கு வந்திருக்கிறது. இதில் நீங்களும் முக்கிய காரணம் அல்லவா?

அதைவிட நான் வியந்துபோய்



உங்களிடம் ஆலோசித்துவிட்டு அதை செய்யலாம் என்று முடிவெடுத்ததற்கு காரணம். என்னிடம் நிலத்தை கேட்ட நிறுவனத்தின் பெயர் ஸ்ரீ சாய்ராம் கன்ஸ்ட்ரக்சன். நீங்கள் கூறியபடியே உண்மையிலேயே சிறந்த மருத்துவர் தான் உங்கள் பாபா. இல்லை யில்லை நம்பாபா என்று உணர்ச்சி வசப்பட்டிருக்கின்றார் நண்பர்.

நண்பருக்கு ஆறுதல் கூறிவிட்டு, எதைப் பற்றியும் கவலைப்படாமல் அவர்களுடன் ஒப்பந்தம் போட்டுக் கொள்ளுங்கள். மற்ற அனைத்தையும் பாபா பார்த்துக்கொள்வார். தங்களின் புதுமனை புகு விழாவிற்கு நான் நேரில் வருகின்றேன் என்று கூறி போனை வைத்திருக்கின்றார்.

சாய்ராம் கன்ஸ்ட்ரக்சன் நண்ப ருடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு அங்கு ஒரு 12 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பை கட்ட திட்டமிட்டு, நண்பருக்கு அதில் ஒரு வீடும், மீதம் உள்ள 11 வீட்டில் குறிப்பிட்ட பங்குத்தொகையும் தருவதாக கூறி ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

இரண்டு ஆண்டுகளில் வீட்டை கட்டி முடிப்பதாக ஒப்பந்தம். ஆனால் குறிப்பிட்ட நாட்களுக்கு முன்னதாக 18 மாதங்களுக்குள்ளாகவே வீடு கட்டப்பட்டு நண்பரிடம் ஒப்படைக்கப் பட்டது. உடனடியாக புதுமனைப் புகுவிழாவிற்கு திட்டமிடப்பட்டு அழைப்பு விடுத்தார் நண்பர். நாங்களும் குடும்பத்துடன் சென்று கலந்து கொண்டோம்.

நாங்கள் சென்றதும் நண்பர் மிகுந்த சந்தோசத்துடன் எங்களை அழைத்துக்கொண்டு வீட்டைச் சுற்றிக்காட்டினார். வீட்டிற்குள் நுழைந்ததுமே ஹாலில் மரவேலைப் பாடுகளால் அலங்கரிக்கப்பட்ட ஆறடி உயர போட்டோ ஒன்று திரைச் சீலையால் மூடி வைக்கப்பட்டிருந்தது.

உள்ளே நுழைந்ததும் நண்பர், குருவின் கைகளில் ஒரு மாலையை கொடுத்து திரைச்சீலையை அகற்றி விட்டு மாலையைப் போடுமாறு கூறினார். குருவும் அவர்கள் சார்ந்த மதகடவுளின் போட்டோவாக இருக்கும் என்ற நினைப்போடு திரைச் சீலையை அகற்ற அங்கே நாங்கள் கண்ட காட்சி

எங்களுக்கு மிகுந்த பேரானந்தமாக இருந்தது. ஆம், ஆறடி உயரத்தில் தஞ் சாவூர் ஓவியத்தில் வரையப்பட்ட பகவான் சாய்பாபாவின் ஓவியம் அது.

அங்கே பாபாவின் படத்தை எதிர்பார்க்காததினால் குருவே ஒரு கணம் அதிர்ந்து போய் விட்டார். பிறகு சுதாரித்துக்கொண்டு பாபாவிற்கு மாலை அணிவித்து வணங்கினார். அங்கிருந்த அனைவரிடமும் அவரது நண்பர், இவர் தான் சீரடி சாய்பாபா, இனி என் குடும்பத்திற்கு இவரே எல்லாம். கடந்த பத்தாண்டுகளாக நான் பட்ட பாடுகளை என் வீட்டிற்கு வந்த பத்தே நாட்களில் தீர்த்து வைத்த தெய்வம். என்று கூறி அவரும்.

அவரது குடும்பத்தினர் அனைவரும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான சீரடி நாதனுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி வணங்கி மகிழ்ந்தனர்.

பாபாவின் சிலையை கைகளில் வாங்கவே தயங்கிய நண்பருக்கு பாபா செய்த அற்புத லீலையை பார்த்தீர்களா நண்பர்களே! யார் ஒருவரின் கர்ம வினைகள் அழிகின்றதோ அந்த நேரத்தில் இனம், மதம் பாராது ஓடிவந்து முதலில் உதவி செய்யும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் நமது பகவான் சாயிநாதர் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்.

நாம் மதத்தால், இனத்தால், சாதியால், மொழியால், இன்னும் பல்வேறு வகையில் பிரிந்திருக்கலாம். ஆனால் நம் பகவான் சாயிநாதருக்கு நாம் எல்லோரும் ஒன்றே! "எல்லா உயிர்களிலும் நானே நீக்கமற நிறைந்திருக்கிறேன்" என்ற சாசணாம்ருத திருமொழியை கூறிய நமது "சமத்துவ சாகரம்" சாயி தேவனை சார்ந்திருப்பதற்கே பெரும்புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

சாயி பக்தர்களாகிய நாம் அவ்விதம் பெரும் பாக்கியவான்கள் என்பதில் பெருமிதம் கொள்வோம். நம் வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியுமே சாயிலீலைதான். அடுத்தமாதம் வேறுபல லீலைகளை பருகுவோம்.

– (தொடரும்)

சுவாமி விவேகானந்தரின் ஞானமொழிகள்

மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டுமே. நீ உனது சொந்த உறுதியான முடிவில் பிடிப்புடன் இரு. பிறகு நிச்சயமாக மற்றவை நடந்தேறி உலகம் உனது காலடியில் பணிந்து கிடக்கும்.

இவனை நம்பு அல்லது அவனை நம்பு என்று மற்றவர் சொல்கிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன் முதலில் உன்னிடத்திலேயே நீ நம்பிக்கை வை. அதுதான் வழி. உன்னிடத்தில் நீ நம்பிக்கை வை. எல்லா ஆற்றல்களும் உனக்குள்ளேயே இருக்கின்றன. அதை உணர்ந்து நீ அந்த ஆற்றலை வெளிப்படுத்து. நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்.

ஒரு சமயம் நான் காசியில் இருந்த போது ஒரு பாதை வழியாகச் சென்று கொண்டிருந்தேன். அந்தப் பாதையின் ஒரு புறம் நீர் நிறைந்த ஒரு பெரிய குளமும், மறு புறம் உயர்ந்த சுவரும் எழுப்பப்பட்டிருந்தன. அந்த இடத்தில் பல குரங்குகள் இருந்தன.

காசியைச் சேர்ந்த குரங்குகள் மிகவும் பொல்லாதவை. சில சமயங்களில் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளக் கூடியவை. அவை தங்கள் பாதையில் என்னைச் செல்ல விடக்கூடாது என்று நினைத்தன போலும்! எனவே நான் செல்லச் செல்ல அவை கிறீச்சிட்டுப் பெரும் சப்தமிட்ட படி என் கால்களைப் பற்றின.

அவை நெருங்க நெருங்க நான் ஓட ஆரம்பித்தேன். ஆனால் நான் ஓட ஓட அவையும் பின் தொடர்ந்து ஓடிவந்து என்னைக் கடித்தன. அந்தக் குரங்குகளிடமிருந்து தப்பவே வழியில்லை என்று எனக்குப்பட்டது. ஆனால் அப்போது முன்பின் அறிமுகமில்லாத ஒருவரை



வழியில் சந்தித்தேன்.

அவர் என்னைநோக்கி, குரங்குகளை எதிர்த்து நில் என்று கூறினார். நான் திரும்பிக் குரங்குகளை எதிர்த்து நின்றேன். அவை பின்வாங்கி முடிவில் ஓடி மறைந்தன. இதுவே வாழ்க்கை முழுவதற்கும் படிப்பினையாகும். பயங்கரத்தை எதிர்த்து நில்! அஞ்சாமல் அதை எதிர்த்து நில்!

இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை. வலிமை நிறைந்த ஒரு களஞ்சியமாக உன்னை உருவாக்கிக் கொள். முதலில் உலக மக்களின் துன்பங்களைக் குறித்து நீ வருந்து. வெறுப்பு உணர்ச்சியாலோ, பொறாமையாலோ, உன்னுடைய மனம் அலைக்கழிக்கப்படாமல் இருக்கிறதா என்று உன்னையே நீ கேட்டுக்கொள்.

சீரடிக்கு இழுக்கப்பட்ட சிட்டுக்குருவி!

இறைவன், தன் பக்தனைப் பொறி வைத்துப் பிடிப்பான் என்று சொல்வார்கள். சீரடி சாய்பாபாவும் அப்படித்தான். அவர் தன் ஆத்மார்த்த பக்தர்களை ஆட்கொண்ட விதம் மிக, மிக அலாதியானது. சில பக்தர்களை அவர் நேரில் காட்சிக் கொடுத்து சீரடிக்கு அழைப்பார். சில பக்தர்களை அவர் கனவில் தோன்றி தீட்சை அளித்து சீரடிக்கு வரவழைப்பார்.

அவர் சர்வ வியாபி. அவர் பார்வையில் இருந்து எந்த ஒரு பக்தனும் தப்ப இயலாது. சாய்பாபா அடிக்கடி ஒரு கருத்தை கூறுவார். "எனது பக்தன் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும், அவன் மூவாயிரம் மைல்களுக்கு தொலைவில் இருந்தாலும் காலில் நூலைக் கட்டி சிட்டுக்குருவியை இழுப்பது போல அவன் சீரடிக்கு இழுக்கப்படுவான்" என்பார்.

மும்பையைச் சேர்ந்த லாலா லட்சுமி சந்த் என்ற பக்தரை சீரடி சாய்பாபா அப்படித்தான் ஆட்கொண்டார். 1910ம் ஆண்டு அவருக்கு சாய்பாபா தம்மைப் பற்றி தெரிய வைத்தார். அதற்கு முன்பு சாய்பாபா பற்றி லட்சுமிசந்த் கேள்விப் பட்டிருந்தாலும், அவரை நேரிலோ, புகைப்படத்திலோ பார்த்தது இல்லை.

மும்பையில் ரெயில்வேயிலும், ராலி பிரதர்ஸ் நிறுவனத்திலும் குமாஸ்தாவாக பணியாற்றிய அவர் 1910ம் ஆண்டு டிசம்பர் மாதம் சாந்தக் குருஸ் என்ற இடத்தில் தங்கி இருந்தார் அன்றிரவு ஒரு வயதானவர் தாடியுடன் அவர் கனவில் தோன்றினார். அவரைச் சுற்றி



நிறைய பக்தர்கள் நின்று கொண்டி ருந்தனர். அதிகாலையில் இந்த கன வைக் கண்ட லட்சுமிசந்த், அந்த வயதானவர் யார் என்று தெரியாமல் குழம்பினார்.

அதற்கான விடை அவருக்கு அடுத்த வாரமே தெரிந்தது. சாய்பாபாவின் முதன்மைப் பக்தர்களில் ஒருவரான தாஸ்கணு மும்பையில் அந்த வாரம் பாபா பற்றிய கீர்த்தனை மற்றும் சொற்பொழிவு நடத்தினார். அந்த கீர்த்தனைக்கு லட்சுமிசந்த்தும் அழைக்கப்பட்டிருந்தார்.

கீர்த்தனை நடந்த இடத்தில் சீரடி சாய்பாபாவின் பெரிய படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த படத்தைப் பார்த்ததும் லட்சுமிசந்த்துக்கு ஆச்சரியம் தாங்க இயலவில்லை. தன் கனவில் வந்தது இவர்தான் என்று மகிழ்ச்சி பொங்க

கூறினார். அந்த மகிழ்ச்சியில் இருந்த அவருக்கு தாஸ்கணு நடத்திய சொற்பொழிவு மேலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

சீரடி சாய்பாபாவின் சிறப்புகளையும், மகிமைகளையும் தாஸ்கணு சொல்ல, சொல்ல லட்சுமிசந்த்துக்கு இருப்புக் கொள்ளவில்லை. உடனே சீரடிக்கு செல்ல வேண்டும். சாய்பாபாவை நேரில் பார்த்து அவர் கால்களில் விழுந்து ஆசி வாங்க வேண்டும் என்று துடித்தார். எப்படியாவது சீரடிக்கு போய் விட வேண்டும் என்று மனதுக்குள் உறுதி செய்து கொண்டார். தனியாக செல்வதை விட யாரையாவது துணைக்கு அழைத்துச் செல்லலாம் என்று நினைத்தார்.

அடுத்த வினாடி அவருக்கு அவரது நண்பர் சங்கர்ராவின் நினைவு வந்தது. இரவு 8 மணிக்கு சங்கர்ராவ் வீட்டுக் கதவைத் தட்டினார். கதவைத் திறந்த சங்கர்ராவ் நலம் விசாரித்து விட்டு "என்ன விஷயமாக பார்க்க வந்திருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு லட்சுமிசந்த் "சீரடிக்கு சென்று சாய்பாபாவை பார்க்கலாம் என்று ஆசையாக உள்ளது. நீயும் என்னுடன் சீரடிக்கு வருகிறாயா?" என்றார்.

இதைக் கேட்டதும் சங்கர்ராவுக்கு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. "நானும் சீரடிக்கு போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளை வா, நாளைக்கேப் புறப்படலாம்" என்றார்.

பொதுவாக சீரடிக்கு செல்ல வேண்டும் என்று எந்த ஒரு பக்தன் உள்ளன்போடு உண்மையாக விரும்புகிறானோ, அவனது ஆன்மிக முயற்சிக்கு பாபாவே யாரையாவது ஒருவரை துணைக்கு அனுப்பி உதவிகள் செய்ய வைத்து விடுவார் என்று சொல்வார்கள்.

லட்சுமிசந்த், சங்கர்ராவ் இருவரது வாழ்விலும் அது மிகச் சரியாக நடந்தது. மறுநாள் லட்சுமிசந்த் தன் மாமாவிடம் 15 ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு சீரடிக்குப் புறப்பட்டார். சங்கர்ராவும் பயணத்திற்கு ஆயத்தமாகவே வந்திருந்தார். இருவரும் மும்பையில் இருந்து ரெயிலில் சீரடிக்குப் புறப்பட்டனர்.

ரெயிலில் அவர்கள் இருவரும் சும்மா வரவில்லை. சாய்பாபாவின் ஆசியைப் பெறும் வகையில், பாபா பற்றிய பாடல்களை பாடியபடி வந்தனர். மற்ற நேரங்களில் ரெயிலில் உள்ள சக பயணிகளிடம் சீரடி சாய்பாபாவின் அற்புதங்கள் பற்றி லட்சுமிசந்த் விசாரித்தபடி இருந்தார். அவரிடம் பேசிய அனைவரும், "சீரடியில் வாழும் சாய்பாபா மிகப்பெரிய ஞானி" என்று புகழ்ந்து கூறினார்கள்.

இதனால் லட்சுமிசந்த்துக்கு சாய்பாபா பற்றிய எதிர்பார்ப்பு மேலும், மேலும் அதிகரித்தது. கோபர்கான் ரெயில் நிலையத்தில் இருவரும் இறங்கியதும், பாபாவுக்கு பழ வகைகள் வாங்கிச் செல்ல வேண்டும் என்று லட்சுமிசந்த் நினைத்திருந்தார். ஆனால் ரெயிலில் மற்றவர்களிடம் பேசிக் கொண்டே வந்த காரணத்தால் பழங்கள் வாங்குவதற்கு எப்படியோ மறந்து விட்டார்.

சீரடி அருகில் வந்த பிறகுதான் பாபாவுக்கு சமர்ப்பிக்க பழ வகைகள் வாங்கவில்லையே என்பது லட்சுமிசந்த்துக்கு நினைவுக்கு வந்தது. பழம் வாங்க முடியாமல் போய் விட்டதே என்று அவர் மனம் மிகவும் வேதனைப்பட்டது. அடுத்த வினாடி ஒரு கிழவி கூடை நிறைய பழ வகைகளை எடுத்துக் கொண்டு

கூவியபடியே வந்தாள். அவளைப் பார்த்ததும் லட்சுமிசந்த் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.


"அம்மா... இங்கே வாருங்கள்" என்று கூறியபடி வண்டியில் இருந்து இறங்கினார். "சாய்பாபாவுக்கு சமர்ப்பிக்க வேண்டும். நல்ல பழமாக எடுத்துத் தாருங்கள்" என்று கேட்டார். அந்த மூதாட்டி மகிழ்ச்சியில் சிரித்தாள். "பாபாவுக்காக, இதோ நல்ல பழங்களாகத் தருகிறேன்" என்று எடுத்துக் கொடுத்தாள்.

பிறகு மீதம் இருந்த அனைத்து பழங்களையும் எடுத்துக் கொடுத்த அந்த மூதாட்டி, "இந்த பழங்களை என் சார்பில் பாபாவிடம் கொடுத்து விடுங்கள்" என்றாள். பிறகு பழத்துக்குரிய பணத்தை வாங்கிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு சென்று விட்டாள்.

லட்சுமிசந்த்துக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நடப்பதெல்லாம் கனவா என்று தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டார். பழம் வாங்க வேண்டும் என்று விரும்பிய மறுவினாடி பழக்காரி வந்தது எப்படி என்று லட்சுமிசந்த் மனம் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்தது.

அடுத்த சில நிமிடங்களில் லட்சுமிசந்த்தும், சங்கர்ராவும் சீரடி வந்து சேர்ந்தனர். குதிரை வண்டியில் இருந்து கீழே இறங்கிய லட்சுமிசந்த் கண்ணில் மசூதியில் கட்டப்பட்டிருந்த கொடிதான் தெரிந்தது. அந்தக் கொடியைப் பார்த்து அவர்கள் இருவரும் வழிபட்டனர். பிறகு இருவரும் மசூதிக்குள் நுழைந்தனர். சாய்பாபாவை நேரில் கண்டதும் லட்சுமிசந்த், சங்கர்ராவ் இருவரும் தங்களையே மறந்தனர்.

வாங்கிச் சென்றிருந்த பழ வகைகளை எப்போது பாபாவிடம் கொடுத்தோம்



என்ற உணர்வே இல்லாமல் அவர்கள் இருந்தனர். கண்ணீர் மல்க அவர்கள் பாபாவை பார்த்து உருகினார்கள். லட்சுமிசந்த் உணர்ச்சிப் பிழம்பாக நின்றார். பாபாவை உரிய முறையில் வணங்கினார். பாபாவின் காலடியில் விழுந்து, "நீங்களே என்னை ஆட்கொள்ள வேண்டும்" என்று சரண் அடைந்து கண்ணீர் விட்டார்.

பாபா சற்றுநேரம் அவரை உற்றுப் பார்த்தார். பிறகு சிரித்தப்படியே லட்சுமிசந்த்தைப் பார்த்து பேச ஆரம்பித்தார். "என்னைப் பார்ப்பதற்கு நீ கடன் வாங்கிக் கொண்டு வர வேண்டுமா? என்னைப் பார்க்க வேண்டும் என்பதற்காக நீ கடன் வாங்கியதில் எனக்கு உடன்பாடு இல்லை. சரி இப்போது உனக்கு சந்தோஷமா? உன் ஆசைகள் பூர்த்தி ஆகி விட்டதா?

என் மீது உனக்கு கொஞ்சம் சந்தேகம் இருந்தது. அதனால்தான் ரெயிலில் வரும்போது மற்ற பயணிகளிடம் என்னைப் பற்றி விசாரித்துக் கொண்டே வந்தாய் அல்லவா? நீ ஏன் அவ்வாறு என்னைப் பற்றி விசாரித்தாய்? எப்போதுமே நாம் நமது கண்களாலேயே எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். அப்போது உனக்கு எல்லாம் புரிந்து விடும்.

முதலில் உனக்கு வந்த கனவு உண்மையா? பொய்யா என்று

நினைத்துப் பார். அதன் பிறகு என் கீர்த்தனைகள் உனக்கு எல்லாவற்றையும் சொல்லி இருக்குமே. இப்போது உன் சந்தேகங்கள் எல்லாம் தீர்ந்து விட்டதா?" சாய்பாபா இவ்வாறு பேச, பேச லட்சுமி சந்த் அதிர்ச்சியில் வாய் பேச முடியாமல் உறைந்து போய் நின்றார். மும்பையில் புறப்பட்டது முதல் சீரடி வந்து சேர்ந்தது வரை அத்தனையையும் பாபா புட்டுப் புட்டு வைக்கிறாரே என்று ஆச்சரியப்பட்டார்.

பாபா எல்லா இடத்திலும் நிறைந்து இருப்பவர் என்பதை லட்சுமிசந்த் அனுபவப்பூர்வமாக உணர்ந்தார். பாபாவுக்கு தன்னைப் பார்க்க வரும் பக்தர்கள், மற்றவர்களிடம் கடன் வாங்கிக் கொண்டு வந்தால் பிடிக்காது. அத்தகைய பக்தர்களை அடையாளம் கண்டு கொண்டு அறிவுரை கூறுவார். லட்சுமிசந்த் விஷயத்திலும் அது 100 சதவீதம் அப்படியே நடந்தது.

லட்சுமிசந்த்தை சீரடியில் 3 நாட்கள் தங்கி இருந்து விட்டு போகும்படி சாய்பாபா கூறி இருந்தார். இரண்டாம் நாள் லட்சுமிசந்த் மசூதிக்கு சென்றிருந்த போது ஒரு பக்தர் "சன்ஸா" எனும் பிரசாதம் கொடுத்தார். அதன் ருசியில் மனதைப் பறிகொடுத்த லட்சுமிசந்த் மூன்றாவது நாளும் அதையே எதிர்பார்த்துச் சென்றார்.

மசூதியில் அவர் அமர்ந்திருந்தபோது பாபாவிடம், "உங்களுக்கு இன்று என்ன நைவேத்தியம் வேண்டும்" என்று கேட்கப்பட்டது. உடனே பாபா அருகில் இருந்த லட்சுமிசந்த்தை பார்த்து சிரித்துக் கொண்டே, சன்ஸா வேண்டும் என்று கேட்டார். உடனே 2 பானைகள் நிறைய சன்ஸா கொண்டு வரப்பட்டது. அதை வாங்கிய பாபா அதில் ஒன்றை எடுத்து லட்சுமிசந்திடம் கொடுத்து, "இதைத் தானே எதிர்பார்த்தாய், சாப்பிடு" என்றார். லட்சுமிசந்த்துக்கு உதறல் எடுத்தது. நம் மனதில் நினைப்பதை கூட பாபா கண்டுபிடித்து சொல்லி விடுகிறாரே என்று ஆச்சரியப்பட்டார்.


அன்று அவர் மசூதியில் இருந்து புறப்பட்டபோது, "லட்சுமிசந்த் நீ முதுகு வலியால் அவதிப்படுகிறாய் அல்லவா. நான் கொடுக்கும் மருந்தைப் போட்டுக் கொள், சரியாகி விடும்" என்றார். தனக்கு முதுகு வலி வந்திருப்பதை லட்சுமிசந்த் வெளியில் யாரிடமும் சொல்லாமல் இருந்தார். அதையும் பாபா கண்டுபிடித்து விட்டாரே என்று திக்குமுக்காடிப் போனார்.


அன்றிரவு பாபா மசூதியில் இருந்து சாவடிக்கு ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டார். அப்போது பாபா கடுமையான இருமலில் அவதிப்பட்டார். அதைப் பார்த்த லட்சுமிசந்த், "பாபாவுக்கு திருஷ்டி பட்டிருக்கலாம். அதனால்தான் இருமலால் அவதிப்படுகிறார்" என்று நினைத்தார்.

மறுநாள் காலை பாபாவிடம் லட்சுமிசந்த் விடைபெற சென்றார். அப்போது பாபா அவரைப் பார்த்து, "எனக்கு திருஷ்டிபட்டு விட்டது. அதனால்தான் இருமினேன்" என்றார். இதைக் கேட்டதும் லட்சுமிசந்த் மெய்சிலிர்த்தார். தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் பாபா அறிந்துள்ளார் என்பதை தெளிவுபட உணர்ந்தார்.

பாபா காலில் விழுந்து கதறி கதறி அழுதார். சத்குரு தெய்வமே என்னை வழி நடத்துங்கள் என்று கண்ணீர் விட்டார். அவரை ஆறுதல்படுத்தி ஆசி வழங்கிய பாபா உதியை கொடுத்து வழியனுப்பி வைத்தார். அதன் பிறகு சீரடிக்கு அடிக்கடி வரும் பக்தர்களில் ஒருவராக லட்சுமிசந்த் மாறிப் போனார்.

ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி அன்னையின் 107வது ஆராதனை





திருவாரூர் மாவட்டம், பூந்தோட்டம் ஸ்ரீ சிவ சித்தர் சீரடி சாய்பாபா துவாரகாமாயி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சாய்நாதரின் பரம பக்தையும், ஜகத்மாதாவுமான ஸ்ரீ இராதா கிருஷ்ணமாயி அன்னையின் 107 வது சமாதி தின ஆராதனை விழா சென்ற 8.12.23 வெள்ளிக்கிழமை அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது.

அதிகாலை 5 மணிக்கு பகவான் ஸ்ரீ சாயிநாதருக்கு காக்கட ஆரத்தியுடன் விழா துவங்கியது. தொடர்ந்து





வேத பாராயணம், மகா சங்கல்பம், கலச பூஜை, ஸ்ரீ சாய்நாதர், ஸ்ரீ இராதா கிருஷ்ணாமாயி மூல மந்திர ஹோமம், மகாதீப ஆராதனை, மற்றும் ஸ்ரீ சாய்நாதருக்கு மத்தியான ஆரத்தியும் நடைபெற்றது.

மதியம் 3 மணிக்கு "பகவான் நாமதாசன்" திரு. முரளி சாய்ராம் அவர்களின் நாமசெபமும், 4 மணிக்கு மதுரை ஸ்ரீ சாந்தி குமாரசுவாமி



அவர்களின் சொற் பொழிவும், அதைத் தொடர்ந்து, கோவிந்த புரம் ஸ்ரீ பாலாஜி பாகவதர் அவர்களின், "ஸ்ரீ சாயி சரண தாச ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி" என்ற தலைப்பில் உபன்யாசமும், தொடர்ந்து மாலை 6 மணிக்கு, ஸ்ரீ சாயிநாதருக்கு மாலை ஆரத்தியும், 1008 அகல்தீபங்கள் ஏற்றி தீப சோதி வழிபாடும் சிறப்பாக நடைபெற்றது.

தொடர்ந்து, சாயி சத்சரிதத்தை தமிழில் மொழிபெயர்த்த பெங்களூர் ஸ்ரீ லஷ்மி ரமணன் அம்மா அவர்களின் திருக்கரங்களால், அன்னையின் 107 வது சமாதி தின ஆராதனையை முன்னிட்டு 107 சுமங்கலி பெண்களுக்கு வஸ்திரதானம் வழங்கப்பட்டது.

இரவு 7மணிக்கு, கலைமாமணி திரு. வீரமணி ராஜூ, திரு. அபிசேக் ராஜூ ஆகியோரின் பக்தி இசை நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெற்றது.



விழாவில் சீரடியில் இருந்து, "வாழும் பாபா" ஸ்ரீ அச்சுதானந்தா சுவாமிகள் அவர்கள் வருகை புரிந்து விழாவிற்கு தலைமையேற்று நடத்திக் கொடுத்தார்கள். மேலும் விழாவில், "பிரார்த்தனைச்செம்மல்" திரு. கலியன் சாய்ராம் அவர்கள், ஸ்ரீ லட்சுமி ரமணன் அம்மா அவர்கள், திரு. பாலாஜி பாகவதர் அவர்கள், திரு. சாந்தி குமார சுவாமிகள் அவர்கள், திரு.முரளி சாய் ராம் அவர்கள், திரு.வேணுகோபால் அவர்கள், திரு.செயச்சந்திரன் அவர்கள், கோவை. திரு. சிவானந்தா அவர்கள், திரு. தீபக், திரு. இரவி, குடந்தை. திரு. ஜெயராமன் அவர்கள், மற்றும் ஏராளமான சாயி பக்தர்களும், ஊர் முக்கியஸ்தர்களும்,பொது மக்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

விழாவில் கலந்து கொண்ட ஏராளமான வெளியூர் பக்தர்கள் தங்கி இளைப் பாறுவதற்கென தனியாக திருமண மண்டபம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதுமட்டுமின்றி, சாயி பக்தர்களுக்கு சேவை செய்வதற்கு



கோவையில் இருந்து சகோதரி நிர்மலா அவர்களின் தலைமையில் 60 பெண் சேவா தொண்டர்கள் வந்திருந்து, விழா நிறைவு பெறும் வரை மிகச்சிறபாக சாயி சேவை புரிந்தனர்.

எதையும் எதிர்பார்க்காது அவர்களை ஒருங்கிணைத்து அழைத்து வந்த சகோதரி நிர்மலா அவர்களையும், ஆலயத்தை கூட்டிப் பெருக்கியதில் இருந்து, உணவு பரிமாறுவதுவரை அனைத்து வேலைகளையும் மனமுவந்து செய்த அனைத்து சகோதரிகளையும் எவ்வளவு பார்ட்டினாலும் தகும். அவர்களது சேவை மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல பகவான் சாயிநாதரை பிரார்த்திக்கின்றோம்.

முதல்நாள் இரவு சிற்றுண்டி, காலை சிற்றுண்டி, மதியம் 1 மணிக்கு வடை பாயாசத்துடன் அன்னதானம், இரவு உணவு என நான்கு வேலையும், விழாவிற்கு வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும், ஊர் பொது மக்களுக்கும், சிறப்பான அன்னதானம் வழங்கப்பட்டது.

விழா ஏற்பாடுகளை மிகச்சிறப்பாக செய்திருந்த, ஸ்ரீ சிவசித்தர் சீரடி சாய்பாபா துவாரகாமாயி ஸ்தாபகர் திரு. சுதாகர் சாய்ராம் அவர்களும், ஸ்ரீ சாய் இராதாகிருஷ்ணமாய் குரு அறக்கட்டளை திரு. சாய் சரவணன் அவர்களும், விழா ஏற்பாடுகளுக்கு உறுதுணையாய் இருந்த அனைத்து மெய்யன்பர்களுக்கும், நண்பர்களு க்கும், ஊர் பொது மக்களுக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

குரு வாழ்க!

குருவே துணை!



MAS மஞ்சு அசோசியேட்ஸ்

GA-232, உணவு தானிய மார்க்கெட், கோயம்பேடு, சென்னை 107.
போன்: 04424793822 /24793823 செல்: 9382163822.

வங்கிக்கடன்கள்

* வீட்டுக்கடன்
* அடமானக்கடன்
* வியாபாரக்கடன்





வருமானவரி தாக்கல்

* டேக்ஸ் ஆடிட்
* நான் டேக்ஸ் ஆடிட்



இன்ஸ்சூரன்ஸ்

* LIC,
* ஸ்டார் ஹெல்த்



மிகச்சிறப்பாக செய்து தருகிறோம்.

மக்கள் சேவையில் 22 ஆம் ஆண்டு!

வாடிக்கையாளர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி!

குறிப்பு: 10 லட்சத்திற்குமேல் கடன்
தேவைப்படுவோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

பகவான் சாயிநாதரின் தமிழ் டைரி!

சத்குரு சாயிநாதரின் அருளால் ஷீரடி சமஸ்தானம் முதன் முதலாக தமிழில் நாட்காட்டியை (Dairy- 2024) வெளியிட்டிருக்கின்றது. "பாபா மாமி" என்று அழைக்கப்படும் திருமதி. ரமா சுப்பிரமணியன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு,

சாயி சமஸ்தானத்தின் தலைமை நிர்வாக அதிகாரி, திரு.சிவசங்கர் IAS, அவர்களும், நிர்வாக அதிகாரி திரு.ராஜ்திலக் பாகவே அவர்களும் திருமதி.ரமா சுப்பிரமணியன் அவர்களிடம் முதல் டைரியை வழங்கினார்கள்.

முன்னதாக தமிழ் டைரியை பாபாவின் திருப்பாதுகைகளில் வைத்து பாபாவிடம் ஆசிர்வாதம் பெறப்பட்டது. இதுகுறித்து திருமதி ரமா சுப்பிரமணியன்







அவர்கள் கூறியதாவது. தமிழ் டைரியை மொழிபெயர்த்து வழங்கியதை பாபாவின் ஆசிர்வாதத்தால் கிடைத்த மாபெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

இனி தமிழை தாய்மொழியாக கொண்ட பகவான் சீரடி சாய்பாபாவின் பக்தர்கள் அனைவரிடமும் சீரடி சமஸ்தானத்தின் தமிழ் டைரி சென்று சேரும். இது சத்குரு சாயிநாதர் நமக்கு அளித்த வரப்பிரசாதமாகும். எனக்கு இந்த மாபெரும் வாய்பை வழங்கிய பகவான் சாயிநாதரின் பாதங்களில் பணிந்து இதனை சமர்ப்பிக்கின்றேன்.

குருவின் திருவடி சரணம்.

தனம் மசாலா

சாம்பார் மசாலா, தனி மிளகாய் பொடி,
மஞ்சள் பொடி, பிரியாணி மசாலா, கரம்
மசாலா மற்றும் தரமான
மசாலா தயாரிப்புகள்.



சுத்தமான, தரமான,
வீட்டுத் தயாரிப்பு,கலருக்கும்,
சுவைக்கும் ரசாயனம்
சேர்க்கப்படவில்லை.

தனம் மசாலா, NO: 2/13, புதுத் தெரு, திருநீர்மலை,
சென்னை– 44. போன்: 9080599587.

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.



அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	– ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	– ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	– ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	– ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	– ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

பணம் என்ற விஷம்

பெற்ற பிள்ளைகளை வெறும் பணம் காய்க்கும் இயந்திரமாக வளர்த்து, வெளிநாட்டிற்கு அனுப்பி டாட்டா காட்டுவதில் நமக்கு எந்த ஒரு பெருமையும் இல்லை! பிறரிடம் அப்படிப் பெருமை பேசுவ தில் நமது வயிறு கூட நிரம்பு வதில்லை! வெறும் போலி யான வாழ்க்கையே அது!



பணம் உள்ளவனாக பிள்ளைகளை வளர்ப்பது பெற்றோருக்கே எதிர்வினையாகத் திரும்பிவிடும். குணம் உள்ளவனாக வளர்க்கிற போதே குடும்ப ஒற்றுமையும், சமுதாய நலனும் மேம்படும். ஆயுட் காலத்தில் செலவழிக்க முடியாத அதிகமான பணம் ஒருவனின் அகந்தையையே வளர்க் கிறது! பணம் விரயமாக பாவமும் அதிகரிக்கிறது!

பேரனுக்கு, கொள்ளுப்பேரனுக்கு என்று பணம் சேர்த்து வைக்கும் பேராசை என்பது ஆன்மாவுக்கு வைக்கிற விஷம்! அது வம்சத்தை துவம்சம் செய்கிற சுய கொள்ளி! அவர்கள் சொந்தக் காலில் நிற்கத் தெரியாத பொறுப்பின்மை மற்றும் ஏளன தற்குறித்தனத்திற்கு அதுவே ஆளாகிறது! உழைப்பின் அருமை உணரப்படாமல் போகிறது! சாயியை நேசித்து வாழ்வதே சிக்கன வாழ்க்கை!

மாபெரும் சேவை

பிரார்த்தனை என்பது பிறருக்காக மட்டுமே செய்யப்படுவது! பிரதிபலன் பாராமல் பிறருக்காக செய்கிற எந்தவிதமான பிரார்த்தனைக்கும் பகவான் பாபா செவி சாய்க்கிறார்! சுயநலம் கடந்து முகம் தெரியாத, முன்பின் தெரியாதவர்களுக்காக நாம் பிரார்த்தனை செய்யும் போது அவர்களுடைய பிரச்சினையும் தீர்கிறது, நமது மனமும் சுத்தமாகிறது!



நமக்காக பிரார்த்தனை செய்வது என்பது, எனக்கு மழையைத் தா! என்று ஓட்டை வாளி மேகத்தைப் பார்த்து பிரார்த்தனை செய்வது போல. "பக்கத்து வீட்டை அமைதியாக வாழ வை சுவாமி!" என்று நாம் பிரார்த்தனை செய்தாலே நம் வீடு தானாக அமைதியாகிவிடும்.

பிரார்த்தனை என்பது மாபெரும் சேவை! பிறருக்காக பிரார்த்தனை செய்கிற போது அது ஆன்மாவுக்கே சாப்பாடு போடுவதாகிறது! சேவை என்பது செயல் அல்ல சுயநலமற்ற ஆன்மீக உணர்வே! "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே!" என்பது வெறும் வாசகம் அல்ல. அதுவே ஞானம்!

இளநீருக்கு இணையான வெள்ளரிக்காய்

இக்காய் பித்த நீர், சிறுநீரகம் ஆகியன சம்பந்தப்பட்ட அனைத்துக் கோளாறுகளையும் குணமாக்குவதில் தலைசிறந்து விளங்குகிறது.


அண்மைக்கால ஆராய்ச்சி முடிவுகள், வெள்ளரிக்காய் கீல்வாதம் சம்பந்தப்பட்ட கோளாறுகளையும் குணமாக்குவதில் வல்லமை மிக்க உணவாகத் திகழ்வதையும் நிரூபித்துள்ளன.

100 கிராம் வெள்ளரிக்காயில் 96 சதவிகிதம் ஈரப்பதம் உள்ளது. மீதி நான்கு சதவிகிதத்தில் உயர்தரமான புரதம், கொழுப்பு, மாவுச்சத்து, தாது உப்புகள், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, வைட்டமின் 'பி' ஆகியவை அமைந்துள்ளன; வைட்டமின் 'சி'யும் சிறிதளவு உண்டு.

சாதாரணமாக வெள்ளரிக்காயைப் பச்சையாகக் கடித்துச் சாப்பிடுவது வழக்கம். ஆனால், வெள்ளரிக் காய்களை மிக்ஸி மூலம் சாறாக்கியும் அருந்தலாம். இளநீரைப் போன்றே ஆரோக்கிய ரசமாய் வெள்ளரிக்காய் சாறு திகழ்கிறது.

வெள்ளரியைச் சமைத்துச் சாப்பிடும்போது பொட்டாசியம், பாஸ்பரஸ் ஆகிய உப்புகள் அழிந்து விடுகின்றன. எனவே, வெள்ளரிச் சாறுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

வயிற்றுப்புண் உள்ளவர்கள் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு தடவை ஆறு அவுன்ஸ் வீதம் வெள்ளரிச்சாறு





அருந்தினால் விரைவில் குணம் தெரியும். காலரா நோயாளிகள் வெள்ளரிக்கொடியின் இளந்தளிர்களை ரசமாக்கி, அதனுடன் இளநீரையும் கலந்து, ஒரு மணிக்கு இரண்டு அவுன்ஸ் வீதம் அருந்தவேண்டும்.

வறண்ட தோல், காய்ந்துவிட்ட முகம் உள்ளவர்கள், வெள்ளரிக்காய் சீசனில் தினமும் வெள்ளரிக்காய்ச்சாறு சாப்பிட்டு வறட்சித் தன்மையைப் போக்கலாம்.

தினமும் மிகச் சிறந்த சத்துணவு போல் சாப்பிடத் தயிரில் வெள்ளரிக் காய்த் துண்டுகளை நறுக்கிப் போடவும். அத்துடன் காரட், பீட்ரூட், தக்காளி, முள்ளங்கி ஆகியவற்றின்

சிறிய துண்டுகளையும போட்டு வைத்து வெஜிடேபிள் சாலட் போல் பரிமாறவேண்டும். அது இல்லத்தில் உள்ள அனைவருக்கும் சத்துணவு கிடைக்கச்செய்கிறது. மேலும் இது நோய் எதிர்ப்புச்சக்தியை அளிக்கும் ஆற்றலையும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கச் செய்யும்.

இக்காயில் உள்ள சுண்ணாம்புச்சத்து இரத்தக் குழாய்களைத் தளர்த்தி உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க வல்லது. மலச்சிக்கலுக்காகச் சிலர் ஏதாவது ஒரு பழம் சாப்பிடுவார்கள். அதற்குப்பதிலாகத் தினசரி இரண்டு வெள்ளரிக் காய்களைச் சாப்பிட்டால் மலச்சிக்கலின்றி எப்போதும் குடல் சுத்தமாய் இருக்கும்.

முகத்தில் உள்ள கரும்புள்ளிகள், வறண்ட தோல், பருக்கள் முதலியவை குணமாக வெள்ளரிக்காயை அரைத்து முகத்தில் பூச வேண்டும். பதினைந்து நிமிடங்கள் முகத்தில் இந்தப் பூச்சு இருக்க வேண்டும். தொடர்ந்து இந்த முறையில் பூசினால் முகம் அழகு பெறும். பெண்கள் இந்த முறையைத் தினசரி பின்பற்றலாம்.

நீரிழிவு நோயாளிகள் எடை குறைய விதையுடன் சேர்த்தே வெள்ளரிக்காய் சாற்றை அருந்த வேண்டும். சிறிய வெள்ளரிக்காய் என்றாலும் பெரிய வகை வெள்ளரிக்காய் என்றாலும், அதை விதையுடன்தான் அரைத்துச் சாறு அருந்த வேண்டும்.

முடி வளர்ச்சிக்கு குறிப்பாகப் பெண்கள் வெள்ளரிச் சாற்றை அருந்த வேண்டும். வெள்ளரியில் உள்ள உயர்தரமான சிலிகானும், சல்ஃபரும் முடிவளர்ச்சிக்குப் பயன்படுகின்றன. இந்தச் சாற்றுடன் இரு தேக்கரண்டி காரட்சாறு, இரு தேக்கரண்டி பசலைக்கீரைச்சாறு, போன்றவற்றையும்



சேர்த்து அருந்தினால் முடி நன்கு வளரும். முடிகொட்டுவதும் நின்றுவிடும்.

காரட் கிழங்கைப் போலவே, வெள்ளரிக் காயில்ன தோல் பகுதி அருகில்தான் தாது உபபுகளும், வைட்டமின்களும் அதிக அளவில் உள்ளன. எனவே, தோல் சீவாமலேயே வெள்ளரிக்காய்களை நன்கு கழுவிப் பயன்படுத்துங்கள்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் தோன்றிய வெள்ளரிக் காயின் தாவர விஞ்ஞானப் பெயர் குக்குமிஸ் ஸாடிவாஸ் என்பதாகும். இது மலைப்பகுதிகளில் நன்கு வளர்கிறது. இமய மலைப்பகுதியிலிருந்து வரும் சிக்கிம் வெள்ளரி 15 அங்குலம் நீளமும் 6 அங்குலம் கனமும் உள்ளது.

ஜமைகா நாட்டு வெள்ளரிக்காய் எலுமிச்சம் பழ அளவிலும், நிறத்திலும் இருக்கிறது. கிழக்கத்திய நாடுகளில் வாசனைக்காக வெள்ளரி அதிகம் பயிராக்குகின்றனர். பிரிஸ்ஜில் இரு வாரங்கள் வரை வைத்து வெள்ளரிக் காய்களை பயன்படுத்தலாம்.

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

பாபாவின் அருள்!

பணம் இருக்கிறவனுக்கு பாபா நிறைய அருள் பொழிந்திருக்கிறார் என்றும், பணம் இல்லாதவன் மேல் பாபா தனது கண்களை திறக்கவே இல்லை என்றும் நாம் நினைக்கிறோம் என்றால், உண்மையில் நாம் மிகவும் பரிதாபத்திற்கு உரியவர்களே! ஒருவர் வசதியாக வாழ்வதற்கும், வசதி இல்லாமல் வாழ்வதற்கும் பாபாவின் அருளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை



பணத்தை வைத்தோ ஆடம்பரத்தை வைத்தோ நாம் பாபாவின் தெய்வீகப் பேராற்றலை நிர்ணயிப்பது நமது பக்குவ மின்மையையே காட்டுகிறது! அவரவரின் பூர்வ புண்ணிய பாவங்களை கணக்கிட்டே, வசதியோ, வறுமையோ ஒருவரது வாழ்வில் நிகழ்கிறது! பாபா மேல் நமக்கான பக்தி, நாம் வசதியாக வாழ்கிற போது நம்மை நல்வழியிலும், வறுமை யாக வாழ்கிற போது அதை தாண்டி வருவதற்கான தைரியமும் தருகிறது!

வசதிகள் வருவதைக் காட்டிலும் வசதிகளை காப் பாற்றவே பூமியில் பாவங்கள் நிகழ்கின்றன!

வசதியும் வறுமையும் நிரந்தரமில்லை! எது நிகழ்ந்தாலும் அது பாபாவின் சங்கல்பம் என்று நம்பிக்கையுடன் இருப்பவர் யாரோ, அவர்களில் ஒருவர் கூட வறுமையில் இல்லை என்பதே உண்மை.

கவலை என்பது வெறும் கற்பனையே!

வண்டியை இயக்காமல் பயணப்படுவது போன்றதுதான் பிரச்சனைகள் தீர்வதற்கு முன்பே நாம் கவலைப் படுவதும்! அப்படி நாம் கவலைப் படுவதால் எந்த பிரச்சனையும் தீரப் போவது இல்லை! எல்லாவிதமான வியாதியும் கவலைப்படுவதால் மட்டுமே வருகிறது



உணவை மட்டும் ஆரோக்கியமாக உட்கொள்ளும் நாம், உணர்வை ஆரோக்கியமாக உட்கொள்வதில்லை! அதுதான் உள்ளார்ந்த முதல் பிரச்சனையே! வாழ்க்கையில் நிகழ்வது அனைத்தும் வெறும் கனவுச் சம்பவங்களே! அதை நாம் தான் பிரச்சனை என்றும், சுமூகம் என்றும், பிரித்துப் பார்க்கிறோம்!

எதிர்மறையான ஒரே எண்ணத்தை மீண்டும் மீண்டும் நினைப்பதே கவலை! ஏற்றுக் கொள்ளும் குணம் இல்லாததால் நாம் கவலைப்படு கிறோம், காரணம் அகந்தை! எல்லாமே நம் இஷ்டப்படி நடக்க வேண்டும் என்ற அகந்தை!

கனவில் நிகழ்ந்த காட்சியை குறித்து தூக்கம் கலைந்து பிறகு யாரேனும் கவலைப்படுவார்களா? முட்டாளே கவலைப்படுவான்.சாயி பக்தர்கள் நாம் ஏன் கவலைப்பட வேண்டும்.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG, REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

தொடர் –30

சாய் சரவணன்

"அதி தேவதை"

திரு.சாதேவை கருவியாகக் கொண்டு பாபா மேகா என்னும் சிவபக்தனை சீரடிக்கு இழுக்க எண்ணம் கொண்டார். சாதே அவர்கள் பாபாவை பெரிதும் விரும்பினார். சாதே அவர்கள் தனக்கு விஸ்வாசமாக இருக்கும் மேகாவை பற்றி சிந்தித்தார்.

மேகா ஒரு எளிமையான சிவபக்தன். சாதேவின் பிராமண சமையல்காரனும் ஆவான். அவனுக்கு சாதே அவர்கள் சந்தியாவந்தனத்தையும் காயத்திரிஜபத்தையும் கற்றுத் தந்தார். மேகாவின் சிவபக்தியையும், அவனது நல்லொழுக்கத்தையும் கண்ட சாதே அவன் பிறவிபயன் பெற சத்குரு சாய்நாதரின் திருவடி தரிசனத்திற்கு அனுப்ப முடிவும் செய்தார்.

மேகா "வீரம்காம்" எனும் ஊரில் உள்ள சிவனுக்கு பூஜை செய்து சிவபக்தியில் எளிமையாக திளைத்தவன். சாதே மேகாவை அழைத்து "மேகா! உன் பிறவிப் பயன் எய்திட சத்குருவின் தரிசனம் செய்ய சீரடிக்கு போ சாய்பாபா உண்மையில் ஈசனின் அவதாரம்! அவரது திருவடியில் உன்னை அர்ப்பணித்து விடு" எனக்கூறி சாதே மேகாவின் கையில் கடிதம் ஒன்றை தந்தார்.

அக்கடிதம் மேகாவை பாபாவிடம் அழைத்துச் செல்வதற்காக எழுதப்பட்டது.ஆனால் மேகா சாயிபாபா ஒரு முஸ்லீம் என கேள்விப்பட்டான். அதனால் மனம் விருப்பமின்றி



சாதேவிற்கு கட்டுப்பட்டு சீரடிக்கு வந்த கதையை நாம் சாய் சத் சரிதையில் 28 வது அத்தியாயத்தில் கண்டிருப்போம்.

மேகாவின் எண்ணத்தை அறிந்த பாபா "அந்த ராஸ்கலை வெளியே தள்ளு நீ உயர்ந்த ஜாதி பிராமணன், நான் கீழான முகமதியன். இங்கு வந்தால் நீ உனது ஜாதியை இழந்து விடுவாய்.

எனவே நீ போய்விடு" என பாபா கோபப்பட்டு பேசிய வார்த்தைகளில் மறைந்திருந்த தன் தவறான எண்ணத்தை உணர்ந்தான். எனினும் மேகா சில காலம் சீரடியில் பாபாவிற்கு தன்னாலான சேவையை செய்தாலும் பாபாவை சிவனாக பாவிக்கும் தன்மை மேகாவுக்கு வரவில்லை. மனம் பக்குவம் பெறவும் இல்லை.

ஆதலால் மேகா சீரடியை விட்டுச் செல்ல முடிவு செய்து புறப்பட்டார். பாபாவின் கூட்டு வழிபாடு செய்ய மேகாவை பாபா சீரடிக்கு இழுத்தது இராதாகிருஷ்ணமாயிக்கு தெரியாமலா இருக்கும். மேகா சீரடியை விட்டுச் செல்கையில் ஆயி தூரத்தில் நின்றபடி "பாபாவை பரமேஸ்வரனாக பாவிக்கும் பக்தி அவ்வளவு எளிதாக கிட்டிவிடுமா? ஆனாலும் நீ மீண்டும் சீரடிக்கு வருவாய்" என நினைத்து ஆயி தன் வேலையை கவனித்தாள்.

பிறகு மேகா திரயம்பக சேத்திரத்தில் சிவனை வழிபட்டான். ஒன்றரை ஆண்டுகள் மேகாவின் மனம் சதா சிவனையே ஸ்மரணம் செய்து கொண்டிருந்தது. பிறகு மேகா திடீரென்று சீரடிக்கு செல்ல வேண்டும் என தாபப்பட்டு ஓடிவந்தான். ஆனால் பாபா ஏன் அவன் இங்கு வந்தான் என கோபப்படுவார். தாமோதர் தாதாகேல்கரின் குறுக்கீட்டால் மேகா சீரடியிலேயே நிரந்தரமாக தங்கி விட்டான். மேகாவின் மேல் சாய்நாதர் அருள் செய்தார். அதன் விளைவாக மேகாவின் மனம் சாயியின் பாதத்தில் லயமாயின.

பாபாவை சிவனாக பாவிக் கும் பக்தி பூர்ணமாக வரும்வரை இராதா கிருஷ்ணமாயி காத்திருந்தாள். பாபாவும் மேகாவிற்கு பல அனுபவங்களைத்



தந்து ஆட்கொண்டார்.ஸ்ரீசாயிநாதரை பரமேஸ்வரனுக்கு நிகராக பூஜிக்கும் பாப பக்தி எளிதில் கிடைக்குமா என்ன? ஆனால், அத்தகைய பாக்கியம் மேகாவுக்கு கிட்டும் காலம் வந்தது.

சாயிபாபா சிவனே என்ற முடிவுக்கு வந்து அவருக்கு பூஜைகள் செய்ய வேண்டும் என தாபம் கொண்டார். அதற்காக சிவனுக்கு பிரியமான வில்வ இலைகளைத் தேடி பல மைல்கள் நடந்து சென்று பாபாவிற்கு வில்வ இலைகளை சமர்பிக்க ஆசைகள் கொண்டு அதை நிறைவேற்றவும் செய்தார். பாபா மேகாவின் பாவ பக்தியை ஏற்றுக் கொண்டார். மேகா இத்தகைய நிலையை அடையும் வரை இராதாகிருஷ்ணமாயி காத்திருந்தாள்.

பாபாவின் கூட்டுவழிபாட்டிற்குரிய சகலவிதமான (ஆரத்தி தட்டு, மணி, ஊதும் சங்கு, தாம்பலம்) போன்ற பூஜை பொருட்களையும் பக்தர்களின் மூலமாக ஆயி சேகரித்து தயார் நிலையில் இருந்தாள். அதே சமயம் பாபாவிற்கு முதன் முதலாக வெண்பட்டுகுடை ஒன்றை அடியவர்கள் மூலம் பிரேமை


யோடு கேட்டு பெற்றுக் கொண்டாள்.

காலமும் நேரமும் கூடி வந்தது. மேகாவுக்கு சாயியின் கூட்டு வழிபாடு முறை எப்படி எல்லாம் நடத்தவேண்டும் என சொல்லித் தந்தாள் ஆயி. பாபாவின் அடியவர்களும் கூட்டு வழிபாடு நடக்கும் நாளை எதிர்நோக்கிய காலம் முடிவு பெற்று எல்லாம் சரியாக நடக்க தொடங்கியது. இராதாகிருஷ்ணமாயியின் இத்தகைய செயலைக் கண்டு பாராட்டிய பக்தர்கள் சிலரே ஆனாலும், எதிர்த்தவர் அதிகம்.

ஆனாலும் பாபா, ஆயி இருவரது சங்கல்பத்திலும் மாற்றம் எதுவும் இல்லை! பாபாவிற்கு கூட்டு வழிபாடு நடத்த யாவரும் தயார் ஆனார்கள். பாபா இரவு சாவடிக்கு சென்றிருந்த சமயம் ஆயி சில அடியவர்களை வைத்து துவாரகாமாயியை கசடறக் கழுவி, வண்ண கலர் பொடிகளால் கோலமிட்டாள்.

அடியவர்கள் மூலம் பெறப்பட்ட சிறுசிறு அலங்கார பூக்களை மசூதியின் தூணிலும், விளிம்பிலும் கட்டி அலங்கரித்தாள். மறுநாள் விடிந்தது. மேகா, தாதாகேல்கர், பாடே, காசிநாத், மஹல்சாபதி, தாத்யா, நூல்கர் சில அடியவர்களுடன் பாபா சாவடியில் இருந்து துவாரகாமாயிக்கு வந்தார்.

நடந்த ஏற்பாடுகளைக் கண்டு பாபா சற்று கோபப்பட்டு ஏதோ வசைபாடினார். அதே கணம் அமைதி யாக இருந்தார்! நித்யபடி பாபா மசூதியை விட்டுச் செல்கையில் முதன்முதலாக இராதாகிருஷ்ண மாயியால் வழங்கப்பட்ட வெண்பட்டு குடையை பாகோஷீ ஷிண்டே எனும் குஷ்டரோக அடியவரிடம் தரப்பட்டு பாபாவின் பின்னே குடைபிடித்து செல்ல தூண்டினர்.



பாபாவோ இதெல்லாம் எதற்கு எனக் கூறி வசைபாடி அமர்க்களம் செய்தார். ஆனால் பாபாவின் அடியவர்கள் சிலர் பாபாவை வேண்ட தனக்கு குடை பிடிக்க பாபா அனுமதியும் தந்தார். அன்று முதல் பாபா எங்கு வெளியே சென்றாலும் பாகோஷி ஷிண்டே குடைப்பிடிப்பது வழக்கம் ஆயிற்று.

பாபா லெண்டிக்கு சென்றிருப்பதை அறிந்த ஆயி மசூதிக்கு வந்து கூட்டு வழிபாட்டிற் குரிய பூஜை பொருட் களையும், பாபாவிற்கு புது பட்டாடை, வாசனை திரவியம், பழங்கள், நெய்வேத்தியமாக ரவை ஹல்வா, பாயாசம், பக்கோடா, வெள்ளி டம்ளரில் குடிக்க நீர், கோவிந்தவிடா என்ற பீடா என அனைத்தையும் அடியார்களிடம் ஒப்படைத்து வெளியே வந்து விட்டாள்.

அப்போது பாபா லெண்டியிலிருந்து

வருவதை உணர்ந்த ஆயி தூரத்தில் நின்று கொண்டு பாபா சில அடியவர் கள் சூழ வெண்பட்டு குடைபிடிக்க ஒரு மஹாராஜனைப் போல வருவதைக் கண்டு ஆயி பிரேமையில் மூழ்கி போனாள். பாபா லெண்டியிலிருந்து மசூதிக்கு வந்தார். எப்போதும் அமரும் இடத்தில் புன்முறுவலோடு அமர்ந்தார்.

மேகாவும், பல அடியவர்களும் பாபாவின் முன்னால். கூடி நின்றனர் ஆயியோ தூரத்தில் நின்று பிரேமையோடு பாபாவை கண்கொட்டாமல் பார்த்தபடி நின்றாள். மேகா பாபாவிற்கு முதன்முதலாக கூட்டு வழிபாடு செய்ய ஆயத்தமானான். இராதாகிருஷ்ணமாயியின் வேண்டு கோளின் பெயரில் மசூதியில் பெரிய மணி கட்டப்பட்டிருந்தது. மணி மசூதியில் அடிக்கப்பட்டது பாபாவின் வழிபாடு தொடங்கியது என்பதை அது குறிக்கும்!

ஒரு கோவிலில் எப்படி பகவானுக்கு அலங்கரித்து, தூபம், தீபம், நைவேத்தியம் செய்து ஆரத்தி வழிபாடு நடக்குமோ அதைப்போலவே இறைவனான சாயிநாதருக்கு மேகா ஈசனே ஆன சாயிக்கு திருவடி அர்க்யம், பாத்யம், நெற்றியில் திலகம் இட்டு, புது பட்டாடை உடுத்தி, மாலைதனை சூட்டி, வாசனை திரவியங்கள் பாபாவின் திருமேனியில் தெளிக்கப்பட்டு தூபம், தீபம், மஹா நைவேத்யம் நடந்தது.

ஆயியால் வழங்கப்பட்ட சில்லீம் புகைகுழாய் பாபாவிற்கு சமர்ப்பணம் செய்து, வண்ணப்பூக்கள் பாபாவின் திருவடியில் சமர்பித்து மேகா தன் சாயி ஈசனுக்கு ஒற்றை காலில் நின்றுக் கொண்டு "பஞ்சாரத்தி" காட்டும்போது "ஆரத்தி சாயிபாபா" எனும் பாடலைப் பாடி மனம் மகிழ்ந்து கூட்டுவழிபாடு அடியவர்களால் சிறப்பாக ஆரம்பம் ஆனது. பாபாவின் அடியவர்களான மஹல்சாபதி, சியாமா, நூல்கர் யாவரும் இந்த கூட்டு வழி பாட்டினால் ஆனந்தம் அடைந்தனர். கடைமுடிவாக ஆயியின் இனிய சங்கல்பம் நிறைவேறியது.

ஆயி தன் லட்சியத்தில் சிறிதுசிறிதாக முன்னேற்றம் கண்டு பாபாவின் கூட்டுவழிபாட்டினால் மக்கள் பலன்களை அடையும்படி செய்தாள். பாபாவோ பக்தர்களின் அன்பிற்கு கட்டுப்பட்டு அவர்கள் செய்யும் யாவையும் ஏற்றுக் கொள்ளவே செய்தார்.

பிறகு பாபா மேகாவை "கிராமத்து தேவதைகள் ஆன சங்கரன், கணபதி, சனி, கண்டோபா, மாருதி என இதர கோவிலில் வழிபாடு நித்யமாய் செய்தப்பின் கடைசியில் என்னை வழிபடு" என ஆணையைத் தந்தார்.

பிறகு யாவும் சாய்சத்சரிதையில் கூறியுள்ளபடி நடந்தது. ஆனால் சீரடி யில் பாபாவின் வழிபாடு, விழாக்கள், ஊர்வலம் என யாவற்றுக்கும் பின்னால் இராதாகிருஷ்ணமாயியின் குருபக்தியும், பேரன்பும் மறைந்து இருந்ததை எவரும் உணரவில்லை அன்றும்! இன்றும்! இவ்வாறாக ஆயியின் தூண்டுதலின் மூலம் சீரடியில் சாயிநாதருக்கு கூட்டு வழிபாடு நடக்க, பாபாவும் மேகாவை சீரடிக்கு இழுத்தார்.

எத்தகைய அற்புத லீலை இது! நம் இராதாகிருஷ்ணமாயியின் புனித குருசேவையும், சாயியோடு இணைந்து சங்கல்பம் செய்து சீரடியில் பற்பல மாற்றங்களை கொண்டு வர இருக்கும் இனிய நிகழ்வுகள் யாவும் அடுத்தடுத்த அத்தியாயங்களில் தொடர்ந்து அனுபவிக்கலாம்!

– தொடரும்...

தொடர் –7

சுந்தர்சாய்

திருவருள் தேடி

ஓம் சாய்ராம்.

நம்மை நலமோடு வாழ வைக்கும் சமர்த்த சத்குரு சாய் மகராஜ் பொற்பாதம் பணிந்து, சாய் அன்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை சொல்லி 'திருவருள் தேடி' தொடரில் போன இதழில் நம்பியவரை காக்கும் சாய் செய்த மாயம் என்ன? என்பதை அறிய இம்மாதம் தொடர்வோம்.

'அமெரிக்க டாலர்' சம்பள பாக்கியை எதிர்பார்த்து நாங்கள் காத்திருக்கும் சமயம் எனது களப்பணிக்கு சென்ற இடத்தில் ஒரு புது அறிமுகம் கிடைத்தது. நானும் சாய்ராம் அருளால் உந்தப்பட்டு அவர்களுடன் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டேன். அதன் காரணமாக முன் தொகையாக அமெரிக்க டாலர் பணப் பரிவர்த்தனையுடன் ஒரு உதவி கிடைத்தது.

அளவிற் சிறியதாயினும் காலத் தாலும், நெருக்கடியினாலும் அது பெரிய ஆசிர்வாதமாக அமைந்ததோடன்றி அதன் தொடர்ச்சியாக ஒரு பெரிய திட்டம் உருவாகியது. மேலும் மாதா மாதம் இந்த பிரச்சினையை சமாளிக்க அது போதுமானதாக இருந்தது. அதுவும் குருவருளால் ஒன்றன் பின் ஒன்றாக உருவான விதம் மனித முயற்சியால் மட்டும் நிகழ்ந்ததில்லை என்பது மிகவும் தெளிவாகவே தெரிந்தது.

யுனைடெட் ரஷ்யா என்ற வகையில் ஒரு நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யும்



விதமாக வேறு ஒரு நாடு செல்ல திட்டம் தயார் செய்து அதை அரசாங்க அனுமதிக்காக அனுப்பியதும் உடனே அதற்கும் சம்மதம் கிடைத்தது.

ஏற்கனவே நான் வேலை செய்த கம்பெனி அந்த நாட்டில் ஒரு முன்னோட்டமாக முயற்சி செய்து தோல்வியில் முடிந்த சரித்திரம் இருந்தது. தற்சமயம் அதையும் ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு நமது சாயி துணையுடன் ஒரு புத்துணர்ச்சியுடன் அங்கு செல்ல எண்ணியிருந்தேன்.

அதற்குண்டான ஆரம்ப கட்ட வேலைகள், அங்கு செல்ல விசா, வியாபாரத் தொடர்பு ஏற்படுத்திக்

கொள்ள வேண்டிய அந்த நாட்டு ஏஜெண்டுகள் என தேடிக் கொண் டிருந்த போது, நாம் சற்றும் எதிர்பாராத வகையில் சில நிகழ்வுகள் அரங்கேறின. அதுவும் இப்பொழுது திரும்பிப் பார்க்கையில் குருவருளின் மகிமையே என்பது புலனாகிறது.

ஆம்! திடீரென்று இந்தியாவிலிருந்து வெளியுறவு அமைச்சகத்தில் இணை அமைச்சர் ஸ்தானத்திலிருந்த ஓர் உயர் அதிகாரி நமது தொழிற்சாலையைப் பார்வையிட வந்ததார். அவருடன் எங்கள் கம்பெனியின் டைரக்டர், இந்திய தூதர் புடைசூழ வரவே, அங்கு நடந்த ஒரு பேச்சு வார்த்தையில் உடனடியாக ஒரே நாளில் நாங்கள் அவர்களுடன் அடுத்த நாளே அழைக் கப்பட்ட விருந்தாளியாக விசா இல்லா மலே அரசாங்க வர்த்தக அமைப்பு உறுப்பினர்களாக அந்த நாட்டிற்கு செல்லும் பெரும் வாய்ப்பு கிடைத்தது.

என்னுடன் ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரியும், மற்றும் இணை அமைச்சர், கம்பெனி டைரக்டர் என ஒரு குழுவாக சென்று அந்த நாட்டில் உள்ள ஓர் உயர் அதிகாரத்தில் இருக்கும் அமைச்சருடன் பேச்சு வார்த்தை என கட கட வென விறுவிறுப்பாக எல்லாம் கண் இமைக்கும் நேரத்தில் அரங்கேற, எல்லாம் ஒரு அனுபவமாக அமைந்தது.

அங்குள்ள சில முக்கியமான மருந்து வியாபாரத்தில் உள்ள ஏஜன்சிகளை சென்று பார்த்து, அவர்களை எல்லாம் விபரமாக ஆராய்ந்து நமது வியாபார கூட்டமைப்பிற்கு ஒத்து வருவார்களா என்பதையெல்லாம் தீர்க்கமாக முடிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் அந்த ஓரிரு நாட்கள் எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது.

மொழி புதியது, மனிதர்கள் மற்றும் அங்குள்ள வியாபார சூழ்நிலை, பரிவர்த்தனைகள் அங்குள்ள பண மதிப்பு, மக்களின் வாழ்க்கை முறை, சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் என எல்லாமே வித்தியாசமாக இருக்கவே, நானும் சுதாரித்துக் கொண்டு என் தனிப்பட்ட ஆய்விற்கு கால அவகாசம் தேவை என துணிவுடன் முடிவெடுத்து வாதிக்க வேண்டி வந்தது. எனவே ஒரு வாரமே, ஒரு மாதமோ ஆனாலும் நான் அங்கேயே தங்கிவிட முடிவுசெய்து டைரக்டரிடம் சம்மதம் பெற்று தங்கிவிட்டேன்.

எனக்குத் தெரிந்தவர்களே அங்கு யாரும் கிடையாது. ஊரும் தெரியாது, மொழியும் புரியாது. இருந்தாலும் தங்கி கள ஆய்வுப் பணி செய்ய வேண்டிய கட்டாயம். அது நமக்கு ஒரு சவால் என்றாலும். அதையும் நம் திறமைக்கு கிடைத்த அறிய சந்தர்ப்பமாக ஏற்றுக் கொண்டேன். அதற்குண்டான மனபக்குவத்தையும், தைரியத்தையும் அளித்தது சாயிராமைத்தவிர வேறு யாராக இருக்கமுடியும்.

முதலில் ஒரு தங்குமிடம் பார்க்க வேண்டும். ஏனென்றால் அங்கு ஹோட்டல் ரூம் வாடகை சுமார் 100 டாலர் ஒரு நாளைக்கு. அதன்பிறகு களப்பணிக்கு செல்ல ஒரு கார் தேவை. இவ்வாறு ஒவ்வொன்றாக எல்லாவற்றையும் ஏற்பாடு செத்த சாய் சத்குருவே என்னுடன் அழைத்துச் செல்ல ஒரு மொழிபெயர்பாளரையும் ஏற்பாடு செய்தார்.

பின்னர் அவருடன் பயணிக்கும் நாட்களில் தான் எனக்கு ஒரு தெய்வ ஏற்பாடு என்றால் என்ன என்பது புரிந்து. மிகவும் ஆச்சரியத்தில் அதிர்ந்தேன்.

எங்களுக்குள் ஒரு பரஸ்பரம்

என்றளவில் ஒரு புரிதல் மிக அவசியமானது. மொழிபெயர்ப்பாளர் சரியான விதத்தில் இல்லையென்றால் விபரீதமான மனக்கசப்பு, தவறான புரிதல் என பேச்சு வார்த்தைகள் தோல்வி யில் முடிந்துவிடும்.

அதைப் போலவே எனக்கு அமைந்த கார் டிரைவர் உட்பட எல்லாமே சாயி ஏற்பாடு என்பது இன்றளவும் எனது நினைவில் நிற்கிறது.

இதற்கிடையில் நான் கற்றுக் கொண்ட அரைகுறை ரஷ்யன் மொழியில் தயக்கமின்றி பேசத் தொடங்கினேன். முக்கியமான பேச்சு வார்த்தைகளுக்கு மொழிபெயர் பாளருடன் சென்றாலும் களப்பணி என்னும் மார்கெட் ரீஸர்ச்க்கு என் னுடைய டிரைவருடன் நான் தனியாகச் சென்று பேசப் பழகிக்கொண்டிருந்தேன்.

அதனால் எனக்கும் அங்கு எல்லோரிடமும் ஒரு நல்ல அறிமுகமும் நட்பும் கிடைத்ததுடன் பல விஷயங்களை நேரடியாகத் தெரிந்து கொள்ள வசதியாக அமைந்து, தன்னம்பிக்கை நன்கு வளப்பட்டது. இது போல் சுய முயற்சியாக தனியாக செல்வதால் எல்லோரிடத்திலும் ஒரு மரியாதை கலந்த நட்பு உருவானது.

நமது வியாபார உத்திகளுக்கு கூர்மை சேர்த்தது. அந்த நாட்டு வியாபாரிகளிடம் நாம் பேரம் பேசும் போது அவர்கள் வியந்தே போனார்கள் என்றால் அது மிகையாகாது.

அவர்கள் இதுவரை வரும் வெளிநாட்டவர்கள் ஸ்டார் ஹோட்டலில் தங்கி எங்களுடன் ஒப்பந்தம் செய்து நாங்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு வியாபாரம் செய்கிறார்கள். ஆனால் நீங்கள் எல்லா விவரங்களிலும்



தலையிட்டு கடுமையான பேரம் செய்கிறீர்கள் என்று மரியாதை கலந்த அன்புடன் விவாதிப்பார்கள்.

அத்துடன் முன்பணம் இன்றி சரக்கு அனுப்புவதில்லை என்ற விஷயத்தில் பிடிவாதமாகவே ஒப்பந்தம் செய்ய முடிந்தது. ஏனென்றால் நம்முடன் வேலை பார்ப்பவர்கள் சம்பளத்திற்கான டாலர்களுக்கு நம்மை நம்பிருப்பது ஒரு பொறுப்பாக அமைந்ததால் அதுவும் பாதித் தொகையை என் கையில் தரும்படி வற்புறுத்தி அதை மிகவும் ரிஸ்க் எடுத்து தொழிற்சாலைக்கு மூன்றாவது ஆள் மூலம் அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம். இதன் மூலம் எனது 5 மாத சம்பளத்தையும் நான் எடுத்துக் கொள்ளவும் வழிகிடைத்தது.

ஒரு புது இடத்தில், மிகவும் கரார் பேர்வழிகளாய் அமைந்த வியாபாரிகளிடம் ஒரு விதமாக முழு நம்பிக்கையைப் பெற்று, சிறு கையெழுத்துக் கூட இல்லாமல் ஆயிரக்கணக்கில் முன் தொகையாக டாலர்களைப் பெற்று எல்லோரது சம்பளப் பாக்கியையும் தீர்த்து வைத்ததில் என்மீது அனைவருக்கும் ஒரு மிகப்பெரிய

மரியாதை கலந்த அன்பு உண்டானது என் சாயி எனக்களித்த பரிசு.

இதற்கான வியாபார உத்தியை உருவாக்கியதில் ஒரு தனி இடம் இந்தியாவில் உள்ள எங்கள் தலைமை அலுவலகத்திலும் நற்பெயரை பெற்றுத் தந்தது. "சுந்தர் மாடல்" என்று களப்பணி ஆளுனர் (M.D) குறிப்பிட்டு எனக்கு முழு சுதந்திரம் அளித்ததும், முழுமையாக என்னை நம்பி எனக்கு 2,50,000 டாலர் மதிப்புடன் 'இன்டர்நேஷனல் கிரடிட் கார்டு' அளித்ததும் எனக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாக நான் உணர்ந்தேன்.

அது என்னை மேலும் ஊக்கு வித்ததுடன், அந்த நாட்டில் வியாபாரத் திலுள்ள அயல் நாட்ட வர்களிடமும் எனக்கு ஒரு நெருகத்தை ஏற்படுத்தியது. அவர்களுக்கும் வியாபாரத்தை பெருக்கு வதற்கும் "மார்கெட் இன்டெலி ஜன்ஸ்" எனப்படும் "சந்தை உளவு" விஷயத்திலும் என் அனுபவ அறிவை மூலதனமாக அளித்தேன்.

அங்கு அசர்பைஜான் (Azerbaijan) என்றழைக்கப்படும் நாட்டில் எனக்கு ஒரு நண்பர் குழாம் உருவானதும், எனது ஆன்மீக பயணத்திலும் அங்கே கிடைத்த சில அனுபவங்களும் எனக்காக சத்ய சாய் பகவான் செய்த பிரத்யேக ஏற்பாடு என்பது எனக்கு பிற்காலங்களில் நன்கு புரிந்தது.

இந்த காலக்கட்டங்களில் என் குடும்பத்துடனும் கம்ப்யூட்டர் மூலம் அடிக்கடி பேசவும் வழி அமைந்தது சத்யசாய் பகவானின் கிருபையால். பகவான் எனக்கு மட்டுமின்றி, என்னை கருவியாக்கி அந்த நாட்டு இளைஞனுக்கும் அருள்புரிந்த ஒரு சம்பவம் இன்றும் இனிமையாக நினைவில் தொடர்கிறது. முழுமையாக அதை அடுத்த இதழில் அனுபவிப்போமா அன்பர்களே!

எல்லாம் சாயி!

எல்லாமுமே சாயி!!

குரு வாழ்க! குருவருள் வாழ்க!!

– தொடரும்.

ஒற்றுமை

தீமை எல்லாம் சமுதாயத்தில் பெருகிவிட்டது! நன்மை எல்லாம் நலிந்துவிட்டது! அதற்குக் காரணம் தீமை செய்கிறவர்கள் தைரியமாகவும், ஒற்றுமையாகவும் இருக்கிறார்கள்! நன்மை செய்கிறவர்கள் எல்லாம் தனித்தனியே பிரிந்து பிரிந்து, பயந்து பயந்து பலவீனமானவர்களாக இருக்கிறார்கள்! ஒரே ஆன்மீக நெறியில் பயணிப்பவர்களுக்குக் கூட தங்களுக்குள்ளே ஒற்றுமை இல்லை!

எல்லோரும் நம்மவரே என்கிற பரந்த மனம் இல்லை! நன்மை செய்கிறவர்க ளிடம் இருக்கிற அகந்தையே அவர்களை பிறரோடு இணைய விடாமல் தடுக்கிறது! ஆன்மீகத்தில் ஏராளமான பிரிவுகள்! எல்லா



பிரிவுகளும் ஒரே பரப்பிரம்மத்தை நோக்கியே அழைத்துச் செல்கிறது என்ற புரிதல் கூட இல்லாமல் அப்படி என்ன ஆன்மீகத்தை நாம் கடைபிடிக்கிறோம்.

நமக்குள் ஒரு பரஸ்பரம் கூட இல்லாமல் பராபரம் என்கிற பாபாவை எப்படி நம்மால் அடைய முடியும்? அன்பு தான் அந்த ஒற்றுமையைத் தருகிறது! அன்பே இல்லாமல் நன்மை செய்வதில் எந்த நன்மையும் இல்லை! ஒரு கை ஓசை யார் காதுகளிலும் விழுவதில்லை! இரு கை ஓசையே இறை சாயிக்கான ஒற்றுமை கீதம்!

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் வேர்க்கடலைச்சித்தரின் சீவ பீட ஆலயத்தை தரிசிப்போம் வாருங்கள்.



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

வேர்கடலை சித்தர்


வேர்க்கடலைச்சித்தரின் பூர்வீகம் சென்னையை அடுத்துள்ள செங்குன்றம் அருகில் உள்ள ஞாயிறு கிராமம் ஆகும். தாயார் பெயர் பங்காரு அம்மையார் என்று தெரிகிறது.

பல சித்தர்களின் ஊரும், பேரும் அவ்வளவு எளிதில் அறிய முடியாது. எங்கோ பிறப்பார்கள், எங்கோ வாழ்வார்கள், எங்கோ சமாதி யடைவார்கள். சித்தன் போக்கு சிவன் போக்கு என்பார்கள்.

அந்தவரிசையில் நம் வேர்கடலை சித்தரைப்பற்றி விரிவான வரலாறு கிடைக்கவில்லை. செவிவழிச் செய்தியாக கேட்டவற்றை " சாய் மகராஜ் குருவை தேடி" வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

சித்தர் சுவாமிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் பணிபுரிந்திருக்கின்றார். சென்னையில் புரசைவாக்கம், பெரம்பூர், திரு.வி.க நகர் பகுதிகளில் அதிகம் நடமாடியிருக்கின்றார்.

நீண்ட தாடி மீசையுடன், மெல்லிய



தேகம் கொண்ட சித்தர், நீதிமன்ற பணி முடிந்ததும் அங்கிருந்து நடந்து கடற்கரைக்குச்சென்று கடலில் குளிப்பாராம். பின்பு பச்சை வேர்கடலையை வாங்கி மடியில் கட்டிக்கொண்டு, கடலையை

தின்று கொண்டே பெரம்பூர் நோக்கி நடந்து வருவாராம்.

அப்படி வருகையில், வழியில் சிரமப் படுபவர்களைக் கண்டால் அவர்களுக்கு வேர்கடலையை கொடுத்து சாப்பிடச் சொல்வாராம். அதை உடனடியாக வாங்கி சாப்பிட்டவர்களின் துன்பங்கள் உடனடியாக நீங்கியதை நேருக்கு நேர் மக்கள் கண்டுள்ளனர்.

அதேபோல நோயாளிகளுக்கு வேர்கடலையும், திருநீறும் கொடுத்து ஆசீர்வதிப்பாராம். நோயாளிகளும் சில நாட்களிலேயே பூரணமாக குணமடைந்து விடுவார்களாம்.

பெரம்பூரில் முருகேச கிராமணியார் என்பவரின் மூக்குபொடி கடை யில் தான் சித்தர் அதிகநேரம் அமர்ந்திருப்பாராம். முருகேசன் சித்தர் மீது அதிக மதிப்பும், மரியாதையும் செலுத்தி வந்திருக்கிறார்.

பொதுவாக சித்தர்கள் ஏதாவது கடைக்கு அடிக்கடி சென்று பொருட்கள் வாங்கினால் வியாபாரம் படுஜோராக நடக்கும். அந்த கடையும் நாளடைவில் மிகப்பிரபலமாகிவிடும். அதுபோலவே முருகேசனுடைய மூக்குபொடி கடையும் சென்னை நகரம் முழுக்க புகழ்பெற்று திகழ்ந்திருக்கின்றது.

அதற்கு நன்றி செலுத்தும் விதமாக முருகேசன் சித்தரின் சீடனாக இருந்து சுவாமிகளின் அனைத்து தேவைகளையும் கவனித்து வந்திருக்கின்றார். வேர்கடலை சித்தருக்கு பல சீடர்கள் இருந்தாலும் இறுதிவரை அவரின் உடன் இருந்தவர் முருகேச கிராமணியார் மட்டுமே.

பெரம்பூர் திரு.வி.க பகுதியில் கடந்த நூற்றாண்டில் புகழ்பெற்ற அருளாளராக திகழ்ந்த வேர்கடலை சித்தரால் எத்



தனையோ பக்தர்கள் பல நல்ல நிலைக்கு உயர்ந்துள்ளனர். அவர்களுக்கு அருள்புரியவேண்டி சித்தர் பற்பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார் என்று செவிவழிச் செய்தியாக கேள்விப்படுகிறோம்.

சித்தருக்கு எப்பொழுதாவது சுருட்டு பிடிக்கும் பழக்கம் உண்டாம். அப்படி சுருட்டு பிடித்துவிட்டு சாம்பலை கீழே தட்டும்போது, சாம்பல் தங்கத் துகள்களாக விழுமாம். இதுபோன்ற பல்வேறு சித்தாடல்களை நிகழ்த்தியுள்ளார்.

காலத்தில் ஒட்டத்தில் சித்தரின் வரலாற்று நிகழ்வுகளை யாரும் பதிவு செய்ததாக தெரியவில்லை என்றாலும், சித்தரின் ஜீவாத்மா இன்றும் அவர் சமாதி கொண்டுள்ள ஆலயத்தில் உயிரோட்டமாக இருந்து வருவதையும், பக்தர்களின் கோரிக்கைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்கின்றது என்பதையும் அங்கு

கூடும் பக்தர்களே சாட்சிகளாக இருக்கின்றார்கள்.

வேர்கடலை சித்தர் 1935 வது வருடம் மார்கழி மாதம் சித்திரை நட்சத்திரம் அன்று தனது உயிரை பிரித்துக் கொள்ளப் போகின்றேன் என்று சீடர்களிடம் முன்கூட்டியே கூறி அதற்குண்டான ஏற்பாடுகளை செய்யச் சொன்னாராம்.

அதன்படியே 1935 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில், சித்திரை நட்சத்திரத் தன்று தன் சீடர்களால் ஏற்பாடு செய்யப் பட்ட திரு. வி. க நகரில் உள்ள இடத்தில் சென்று அமைதியாக தியானத்தில் அமர்ந்து கொண்டதும் சில நிமிடங்களில் அவரது ஆத்மா உடலைவிட்டு பிரிந்ததாம். சித்தருக்கு அங்கேயே சீவசமாதி அமைத்து வழிபட்டு வந்திருக்கின்றார்கள்.

தற்போது சீவசமாதி ஆலயத்தை விரிவுபடுத்தி மூன்று நிலை ராஜ கோபுரத்துடன் மிகப் பெரிய ஆலயமாக கட்டப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள சீவசமாதி ஆலயங்களிலேயே, மிக அழகாகவும், மிகப்பிரமாண்டமாகவும் இவ்வாலயம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.



வேர்கடலைச்சித்தர் திருவண்ணா மலை பகவான் இரமண மகரிஷிகளுடன் தொடர்பில் இருந்ததாக கூறப்படுகின்றது. அதனால்தானோ எண்ணவோ திருவண்ணா மலையில் இருந்து சாதுக்கள் பலரும் அடிக்கடி சுவாமிகளின் சீவ சமாதியை தரிசிக்க வருகின்றார்கள்.

சித்தரின் பேரருளைப் பெற நீங்கள் செய்ய வேண்டியது பெரிதாக ஒன்றும் இல்லை. பத்து ரூபாய்க்கு வேர்கடலையை வாங்கிச்சென்று அவரது சீவ சமாதியில் வைத்து வழிபட்டால் போதும். அவரது அருள் நிச்சயமாக உங்களுக்குக் கிட்டும்.

சித்தர்களின் சீவசமாதியை தரிசிப்போம்!
வாழ்வின் கர்மவினைகளை அழிப்போம்!

சீவசமாதி ஆலய முகவரி:

ஸ்ரீலஸ்ரீ வேர்கடலைசுவாமி சீவசமாதி, ஸ்ரீ விசாலாட்சி அம்பிகை உடனுறை காசி விஸ்வநாதர் ஆலயம், வேர்கடலை சாமி மடம், அய்யாவு தெரு, பெரம்பூர், திரு. வி.க நகர், சென்னை – 11

சென்னை, பெரம்பூர் திரு.வி.க நகர் பேரூந்து நிலையத்தின் அருகில் உள்ள மீன் மார்க்கெட் பின்புறம் கோமதி சங்கரநாராயணர் ஆலயம் உள்ளது.

அதை தாண்டி வலதுபக்கம் திரும்பினால் அய்யாவு தெரு வரும். அங்கு சித்தரின் சீவ சமாதியை காணலாம்.

<u>பேரூந்து மார்க்கம்:</u>

கோயம்பேடு திரு.வி.க நகர்

<u>இறங்குமிடம்:</u>

திரு.வி.க நகர். பேரூந்து நிலையம்

<u>ரயில் மார்க்கம்:</u>

சென்னை கடற்கரை திருவள்ளூர்

<u>இறங்குமிடம்:</u>

பெரம்பூர் ரயில் நிலையம்.



எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

ஸ்ரீ வித்யாதிராஜா சட்டம்பி சுவாமிகள்



ஸ்ரீ வித்யாதிராஜா சட்டம்பி ஸ்வாமி திருவடிகள் கேரளாவைச் சேர்ந்த ஒரு பெரிய யோகி, நம் நாட்டில் மிகவும் வணங்கப்படும் ஆன்மீகத் தலைவர்களில் ஒருவர். ஆகஸ்ட் 25, 1853 ஆம் வருடம் திருவனந்தபுரம் கண்ணன்மூலில் உள்ள கொல்லூர் மடத்திற்கு அருகில் உள்ளூர்கோடு எனப்படும் நாயர் குடும்பத்தில் பிறந்தார்.

ஸ்ரீ வாசுதேவசர்மா அவரது தந்தை மற்றும் ஸ்ரீமதி அங்கா தாயார். பெற்றோர் அவரை அய்யப்பன் என்று அழைத்தனர், ஆனால் அவர் 'குஞ்சன் பிள்ளை' என்று அழைக்கப்பட்டார். குடும்பத்தின் மோசமான நிலை காரணமாக அவரால் படிப்பிற்காக பள்ளியில் சேர முடியவில்லை.

கொல்லூர் அத்தியார் மடத்தி லிருந்து 'ஆசான்' போதனையை கேட்டறிந்தார். இதை அறிந்த அதியர் மடம் வகுப்பறைக்குள் உட்கார அனுமதிக்கப்பட்டது. இந்த 'ஆசான் பள்ளியில்' மலையாளம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளைக் கற்றார். அவர் வகுப்பை மேற்பார்வையிட்டார், எனவே அவர் 'சட்டம்பி' என்று அழைக்கப்பட்டார், அதாவது 'கண்காணிப்பாளர்'.

கல்விக்குப் பிறகு, ஆவணம் எழுதுவதை ஒரு தொழிலாகப் பயிற்சி செய்தார். அவர் அரசாங்க செயலகத்தில் கணக்காளராகவும் பணியாற்றினார். அவர் தமிழ் பண்டிதரும் தொப்பி யோகியுமான ஸ்ரீ தைக்காட்டு அய்யாவிடமிருந்து 'தொப்பி யோகா' கலையைக் கற்றுக்கொண்டார்.

பண்டிட் சுவாமிநாத தேசிகரிடம் தமிழ் வேதப் பணிகளையும் கற்றார். அவர் பிரபல பண்டிதர் மற்றும் அறிஞரான சுப ஜடாபதிகளின் சீடரானார். அவர் தென்னிந்தியா முழுவதும் பயணம் செய்து பல்வேறு மொழிகளிலும் மதங்களிலும் அறிவைப் பெற்றார். திரும்பிய அவர், ஆத்மானந்தா சுவாமிகளிடம் யோகா கலையில் நிபுணர் பயிற்சி பெற்றார்.

சட்டம்பி சுவாமிகள் சுவாமி விவேகானந்தரைச் சந்தித்தது சாதியச் சமூகத்தில் சமூக மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு உறுதுணையாக இருந்தது.1892,ல் விவேகானந்தர் கேரளாவிற்கு விஜயம் செய்த போது

சட்டம்பி சுவாமிகள் எர்ணாகுளத்தில் சந்தித்தார். சுவாமிகளுடனாக சந்திப் பைப்பற்றி விவேகானந்தர் இவ்வாறு எழுதினார். "இங்கே நான் ஒரு குறிப்பிடத்தக்க மனிதரை சந்தித்தேன்".

சட்டம்பி சுவாமிகள் என்று அழைக்கப்படும் ஸ்ரீ வித்யாதிராஜா சட்டம்பி ஸ்வாமிகள் கேரளாவின் சிறந்த அறிஞர்,துறவிகளில் ஒருவர். சமூகத்தில் நிலவும் கடுமையான சாதி அமைப்பு மற்றும் சமூக தீமைகளுக்கு எதிராக அவர் போராடினார்.

சுவாமிகள் மிகவும் எளிமையாக வாழ்ந்தவர். ஒரு முண்டு (கேரளத்தில் இடுப்பில் அணியும் ஆடை) ஒரு இரும்பு மோதிரம், மற்றும் பழைய குடை, ஒரு வாக்கிங் ஸ்டிக் மற்றும் ஒரு கஞ்சிரா ஆகியவை அவருடைய ஒரே சொத்து. அவருக்கு வீடும் இல்லை, நெருங்கிய நண்பர்களும் இல்லை. இந்த உலகம் அவருடைய குடும்பம். கவலையற்றுப் பாடும் பறவை போல இடம் விட்டு இடம் மாறிக்கொண்டே இருப்பார்.

சட்டம்பி சுவாமிகள் பெற்ற ஆன்மீக மற்றும் மாய சக்திகள் எண்ணற்றவை. ஆனால் அவைகளை அவர் வெளியே காட்டிக்கொள்ள தயங்கினார். அவரது பிரம்மச்சரியமும் தீவிர தவமும் அவருக்கு அனைத்து யோக சித்தி களையும் வழங்கியது. சுவாமிகள் இயற்கையாகவே, விலங்குகள் மற்றும் மனிதர்களை ஈர்க்கும் சக்தியைக் கொண்டிருந்தார்.

ஆனால் அவர் இந்த சக்திகளை சுயநலத்திற்காக ஒருபோதும் தவறாகப் பயன்படுத்தியதில்லை. தீராத



நோய்களைக் குணப்படுத்தவும், நாகப்பாம்புகளையும், புலிகளையும் அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியச் செய்யவே அவற்றை பயன்படுத்தினார்

ஒரு நாள் ஸ்வாமிகளை பக்தர் ஒருவர் தனது வீட்டில் உணவருந்த அழைக்க, தனது சீடர்கள் சிலரை தன்னுடன் அழைத்து வர அனுமதிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒத்துக்கொண்டார். இலைகளில் விருந்து பரிமாறப்பட்டபோது தெரு நாய்கள் கூட்டத்துடன் வீட்டிற்குள் நுழைந்தார். நாய்கள் இலைகளின் அருகே வரிசையாக அமர்ந்து, ஒழுங்கு முறையில் சுவாமிகளுடன் உணவு உண்டன.

சட்டம்பி சுவாமிகள் பல்வேறு அறிவுத் துறைகளில் போற்றத்தக்க தேர்ச்சி பெற்றிருந்தார். அபாரமான ஞாபக சக்தியை கொண்டிருந்தார். வேதம், இலக்கணம், ஜோதிடம்,



ஆயுர்வேதம், யோகா, தர்கா சாஸ்திரம், தந்திர வித்யா மற்றும் தமிழ் மற்றும் சமஸ்கிருத இலக்கியங்கள் ஆகியவை அவருக்கு ஆர்வமாக இருந்தன.

அவர் இசையமைத்து இனிமையாக பாடடுவார். அவருக்குப் பிடித்த கருவி கஞ்சிரா. எந்தவொரு இசைக் கருவி யையும் அசல் தன்மையுடன் வாசிப்பதில் அவரது திறமையானவர். அவர் கதகளி ஆடுவதிலும், ஓவியம் வரைவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் ஒரு சிறந்த மல்யுத்த வீரராக இருந்தார். அவரது கவிதைகளும், எழுத்துக்களும் இலக்கியத்தரத்துடன் இருந்தன. அவருடைய யோக சித்தி அவருக்கு தீர்க்கதரிசன சக்தியைக் கொடுத்தது.

"ஸ்ரீ நாராயண் குரு" கேரளாவைச் சேர்ந்த ஒரு சிறந்த இந்து துறவி, இந்திய சமுதாயத்தின் முனிவர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி. ஸ்ரீ சட்டம்பி சுவாமிகள். ஸ்ரீ நாராயண குருவின் தத்துவ மேதையையும் யோகாவின் மீதான ஆர்வத்தையும் கண்டறிந்து பாராட்டியவர், அவரை சிறந்த ஹத யோகியான சுவாமி ஸ்ரீ தைக்காடு அய்யாவுக்கு அறிமுகப்படுத்தினார்.

யோகியின் கீழ், ஸ்ரீ நாராயண குரு ஹத யோகா உட்பட பல்வேறு யோகப் பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றார். இந்த புலமை அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட வெளிப்பாடு ஸ்ரீ நாராயண குருவின் பிற்கால வாழ்க்கை மற்றும் தத்துவத்தில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஸ்ரீ நீலகண்டதீர்த்தபாத ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீ தீர்த்தபாத பரமஹம்ச ஸ்வாமிகள் ஆகியோர் இவரது இரு முக்கிய சீடர்கள். இந்த சீடர்கள் மற்றும் சுவாமிகளின் பக்தர்கள் அனைவரும் கேரள மக்களின் சமூக மற்றும் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினர்.

மகாயோகி ஸ்ரீ.வித்தியாதிராஜா சட்டம்பி சுவாமிகள் பன்முக ஆளுமை கொண்டவர். சிறந்த பேரறிவாளன், அவர் ஒரு துறவி, ஒரு யோகி, ஒரு மகரிஷி, ஒரு நண்பர், அனைத்து படைப்புகளையும் ஒரே மாதிரியாக நேசித்தவர், சமூக உறவுகளின் ஒரு பகுதியாக இல்லாமல் சமூக உறவுகளுக்கு முன்னோடியாக இருந்த சிறந்த தத்துவஞானி, உயர்கல்வி இல்லாத புகழ்பெற்ற அறிஞர்,

இத்தகைய தகுதியினால் பல்வேறு சமூகங்களுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்துவதில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றார்.

சுவாமிகள் குறிப்பிட்ட எந்த இடத்திலும் நிலையாக வசித்ததில்லை. தன் வாழ் நாளின் இறுதிக் கட்டத்தில், கொல்லத்தில் இருந்து வடக்கே 18 கிமீ தொலைவில் உள்ள பன்மனா என்ற கிராமத்தில் குடியேறினார், அங்கு அவரது சீடர் ஸ்ரீ கும்பலத்து சங்கு பிள்ளை, அவருக்கு வேண்டிய தங்கும் இடத்தை ஏற்பாடு செய்தார்.


சட்டம்பி சுவாமி ஆஸ்ரமம்
பன்மனை. கேரளா

அங்கு நூற்றுக்கணக்கான மக்கள் அவரை தரிசனம் செய்யவும், ஆலோசனை பெறவும், ஆசி பெறவும் செல்வது வழக்கம். அவர் அனைவரையும் அன்புடன் வரவேற்றார். மெல்ல மெல்ல முதுமையின் அனைத்து உபாதைகளும் அவரைத் தாக்க ஆரம்பித்தன. ஆன்மா அதன் விடுதலையைப் பெறுவதற்கு முன்பு உடல் தாங்க வேண்டிய அனைத்து நோய்களையும் தாங்க வேண்டும் என்பதை அவர் தனது சீடர்களுக்கு நினைவூட்டினார்.

அவர் தனது இறுதிப் புறப்பாட்டின் நேரத்தை பலரால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றாலும் அவர் தனது இறுதிக்கணத்தை தீர்க்கதரிசனமாகக் கூறினார். இறுதிக் கணம் வந்ததும் சுவாமிகள் பத்மாசனத்தில் அமர்ந்த சில நொடிகளில், ஸ்வாமிகள் 5 மே 1924 அன்று மாலை 4 மணிக்கு நித்திய சமாதிக்குள் நுழைந்தார்.

அவருடைய உடல் ஏற்கனவே அவர் தேர்ந்தெடுத்த இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. சமாதி பீடத்தில் அவர் அறிவுறுத்திய படி ஒரு சிவலிங்கம் நிறுவப்பட்டது.

சட்டம்பி சுவாமிகளின் சீடர்களில் ஒருவரான ஸ்ரீ சங்கு பிள்ளை, பின்னாளில் சுவாமிகளின் சமாதி இருக்கும் பன்மனையில் ஒரு ஆஸ்ரமத்தை நிறுவினார்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திரு.சுடலை முத்து. திருநெல்வேலி.ரூ.1200
குழந்தை. வர்ஷிகா. மதுரை. ரூ.1000.
திரு.கேஸ்வர். ஈரோடு.ரூ.700.
திருமதி. சக்திவேல் உமா AYK.. ரூ.1000
திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK. ரூ.600.
திரு. முரளி சாய்ராம். திருநின்றவூர். ரூ.500.
திருமதி. நித்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திருமதி. சுமதி.வாழ்க வளமுடன். கொளத்தூர். ரூ.500
திருமதி.மகாலட்சுமி பொன்முருகன். மதுரை. ரூ.500

திருமதி.நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி. ரூ.500

திருமதி.உமா மகேஸ்வரி. அயனாவரம். ரூ.500.

வி.எஸ். வசுந்தரா. மயிலாப்பூர். ரூ.500.

திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500

திரு.பரமேஸ்வரன். அம்பத்தூர். ரூ.500.

திரு. கருணாமூர்த்தி. அயனாவரம். ரூ.500.

திரு.ரமேஷ் பாப். சென்னை. ரூ.500.

திருமதி. சித்ரா சுபாஷ். சென்னை. ரூ.500

திருமதி. பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.400.

திருமதி.லதாபாபு. வேப்பம்பட்டு. ரூ.300.

திருமதி.பவித்ரா. கொளத்தூர். ரூ.300.

திரு. சாய் கலையரசன். காரப்பிடாகை. ரூ. 200.

திருமதி.உமா முருகன். சின்னாளபட்டி. ரூ.200.

திருமதி.ஜெயந்தி தியாகராஜன். மாவுத்தன்பட்டி. ரூ.200

திரு.கார்த்திகேயன். கதிர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.

திரு.சூர்யா. கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.

திரு.கணேஷ் கபே. வில்லிவாக்கம். ரூ.101.

திரு.பி. பிரவீண்குமார்.வில்லிவாக்கம். ரூ.101

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100.

திரு.வி.பலராமன்.அயனாவரம். ரூ.100.

திரு.பிரியா குடும்பத்தார். அயனாவரம். ரூ.100.

திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 26 கி.



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* **5 வருச சந்தா - ரூ.1000 (தபால் செலவு உள்பட)**
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. சாய் ரவிச்சந்திரன் கோவை ரூ.500
திரு.ராஜராஜன் புதுக்கோட்டை.ரூ.500
திரு. பிரசாத் மாயவரம். ரூ.250.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068